


ஏப்ரல் 1990 விலை ரூ.3

# திருக்கோயில்





சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் கந்தர் அனுபூதி மண்டபம் மற்றும் சித்தர் சமாதி முன்மண்டபத்தை 1.3.90 அன்று திறந்து வைத்தார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை தாங்கிய இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும், உதவி ஆணையாளருமான திரு ஏ. ஜெயராமன் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.





முகப்பு:

சேலம் குமரகிரி
அருள்மிகு தண்டபாணி சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு சித்திரை<br>ஏப்ரல் 1990 விலை ரூ. 3-00 | மணி : 4 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

எல்லா உயிரும் தொழும்
—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

சீர்காழி முத்துத் தாண்டவர்
—பேராசிரியர் மு. அருணாசலம்

மனம் போல வாழ்வு
—பி.கே. பொன்னம்பலநாதன்.

சித்திரபாரதம் —செவ்வேள்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்.

சிற்பக்கலை சிறப்புமிக்க தாரமங்கலம்
—அருள்முருக சௌந்தரராஜன்.

நால்வர் கண்ட நாயகன் நடனம்
—வே. தியாகராஜன்.

குமரகிரி கண்டு தொழுவோம் வாரீர்
—நிறைமதி.


மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம்
—பேராசிரியர் தேவ நடராஜன்.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# எல்லா உயிரும் தொழும்

## மாண்புமிகு முதல்வர்
## டாக்டர் கலைஞர் அவர்கள்



மீன் தொட்டியிலே வண்ண வண்ணக் கயல்களை விளையாடவிட்டுக் கண்டு மகிழ்கிறோம். சின்னஞ்சிறு முயல்கள் வீட்டுத் தோட்டத்திலே காற்றிலே உருளும் பஞ்சு உருண்டைகளைப் போல் சுற்றிச் சுற்றி ஓடுவதை உவகை பொங்கிடக் கண்டு சுவைக்கிறோம்.

புறாக்களின் சிறகுகளைத் தடவிக் கொடுத்து அவற்றுக்கு உணவு தானியங்களை அள்ளி இறைத்து அவை, கொத்தி உண்ணும் கோலத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொடுக்கிறோம்.

வளர்க்கும் மீன்களில் ஒன்றையோ, புறாக்களில் ஒன்றையோ, முயல், கோழி, இவற்றில் ஒன்றையோ அறுத்துச் சமைத்து இன்றைக்கு அமுது பரிமாறட்டுமா என்று வீட்டில் உள்ளோர் கேட்டால், ''வேண்டாம் வேண்டாம்'' என்று அன்பு பீறிடச் சொல்கிறோம்.

நம் கை பட்டு வளர்ந்துவிட்டவை என்பதால் அவற்றைக் கொல்வதும்-உண்பதும் நம் இதயம் ஏற்றுக் கொள்ளாத ஒன்றாக ஆகிவிட்டது.

நம்மால் வளர்க்கப்பட்டவைகள் மட்டுமல்ல; வளர்க்கப்படாத உயிரினங்களும் கொல்லப்படுகின்றன; அதுவும் உணவுக்காகக் கொல்லப்படுகின்றன என்பதை ஆழ்ந்து எண்ணிடும் பொழுது வளர்க்கப்பட்ட உயிரினங்களின் மீது காட்டப்படும் அதே அன்பினையும் இரக்கத்தையும், வளர்க்கப்படாத நிலையில் பறந்து திரியும் புறாக்களையும், குருவிகளையும், ஆடுகளையும், மாடுகளையும், மான்களையும், முயல்களையும், உணவுக்காகக் கொன்றிடும் பொழுது காட்டிட வேண்டாமோ என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

மக்கள் தொகையின் பெருக்கம் கோடி கோடியாக வளர்ந்து கொண்டே போகும் போது-உணவு தானியங்கள் மட்டும் போதாமல் உணவும் தேவைப்படுகிற நிலை உலகில் தவிர்க்க முடியாததாகி விட்டிருக்கிறது. ஊண் உணவு வாயிலாகவும் உணவுத் தேவையை நிறைவு செய்து, ஊட்டச்சத்தினையும் பெற்றிடுக என்று அரசுகள், மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிற கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புலால் உண்ணுதலைப் பெருங் கொடுமையாகக் கருதாமல்-புலாலும், உணவு வகையினுள் ஒன்றாக இணைக்கப் பட்டே உலகம் இயங்கி வருகிறது.


ஆனால் வள்ளுவர், நம் கை தொட்டு வளர்க்கிற உயிரினங்களைக் கொன்று புசிப்பதை நாம் வெறுப்பதே போல்-உலகில் எந்தவொரு உயிரையும் கொன்று புசிப்பதை வெறுத்துக் கடிகிறார்.

உயிரை வளர்ப்பதற்காக இன்னொரு உயிர் போக்கப்படுவதை அவரால் சகிக்க முடியவில்லை.

''எந்த உயிரையும் கொன்று உணவாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பவரை உலகில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும்' என்று குறள் தீட்டுகிறார்.

கொல்லான் புலாலை மறுத்தானைக்
எல்லா உயிரும் தொழும். [கைகூப்பி

இதற்கும் மேலே வள்ளுவர் ஒருபடி சென்று அவிசொரிந்தாயிரம் வேள்விகள்செய் வோரையும் சாடுகிறார். நெய்யைக் குடம்







குடமாகக் கொட்டி ஆயிரக்கணக்கில் யாகங்கள் செய்வதைக் காட்டிலும் ஒரு உயிரைக்கொன்று தின்னாதிருத்தல் மேலானது-நன்மை பயக்கக் கூடியது-என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.

அவியெனும் நெய்சொரிந்து மட்டுமல்ல, ஆடு, மாடு குதிரைகளைக்கூட வெட்டியாகங்கள் நடத்தியோரும், நடத்துவோரும் உண்டே, ஒரு உயிரைக் கொன்று புசிப்பதைத் தவிர்த்தால் நெய்யைப் பெய்து வேள்விகள் செய்வதே கூட தேவையற்றது எனக் கூறும் வள்ளுவர்-பல உயிர்களைக் கொன்று நடத்திடும் யாகங்களை ஏற்றுக் கொள்வாரா? ஏற்றுக் கொள்ள மாட்டார். ஏற்றுக் கொள்ளவில்லை.

புலால் மறுத்தல் எனும் இந்த அதிகாரத் துப் பாடல்கள், துறவறவியலில் இணைக்கப் பட்டுள்ளன என்றாலும்கூட இல்லறம் மேற் கொண்டோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய உள்ளமுருக்கும் கருத்துகள் அல்லவா?

அவிசொரிந் தாயிரம் வேட்டலின்ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

**—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக் கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப் படுகிறது.**

---

## நடவடிக்கை எடுத்து வருகிறோம்



**சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் உண்டியல் வைத்து வசூலிக்க சிறு சிறு திடீர்க் கோவில்கள் உருவாகி வருகின்றன. இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

**—அறநிலையத்துறை அமைச்சர்**

**மாண்புமிகு கே.பி. கந்தசாமி, எம்.ஏ.**

# கண்டு தொழுவோம் வாரீர் குமரகிரி





—நிறைமதி—

**குமரகிரி தோன்றிய வரலாறு**

''சாது கருப்பண்ண சாமியென் பார் முயன்று
ஓதும் குமரகிரி ஓங்கல்மேல்—மாதவர்கள்
செல்லவும் மாதண்ட பணியைச் சேவிக்கவும்
நல்லதலம் செய்தார் நாடு''

சேலம் அம்மாப்பேட்டைக்கு அருகாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் நாற்புரமும் வயல்கள் சூழ்ந்த அழகிய இயற்கைச் சூழலில் மலைமேல் அமைந்து விளங்கும் அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சாமி ஆலயத்தைக் கருப்பண்ண சுவாமிகள் கட்டுவித்த வரலாறு ஒரு அற்புத வரலாறு ஆகும்.

அம்மாப்பேட்டையில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் மாரியப்பர் - சின்னம்மாள் தம்பதிகளின் ஒரே தவப் புதல்வராகத் தோன்றியவர் கருப்பண்ணர். வள்ளியம்மை எனும் மங்கை நல்லாளை மணந்து இல்லறம் எனும் நல்லறத்தில் ஈடுபட்ட கருப்பண்ணர் ஆறு குழந்தைகள் இரண்டு பெண் குழந்தைகள் ஆக எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையும் ஆவார். நம் சைவ சமயம் வளர்த்த நாயன்மார்கள் பலரும் இல்லறத்தில் இருந்து கொண்டே அரிய அரும்பணியையும் ஆற்றியது போலவே கருப்பண்ணரும் சிறந்த பக்தராக-பக்தர்களுக்கு அறம் பல புரியும் இறை பணியாளராகத் திகழ்ந்து வந்தார். இவருடைய இல்லத்தை ஆன்மீக ஞானிகள் பலர் நாடி வந்து, வீற்றிருந்து அருள் ஞான உபதேசங்களையும் பொழிந்து வந்தார்கள். சித்தமெல்லாம் சிவமயமாகி இல்லறப்பந்தங்களிலிருந்து தம்மை அறவே விடுவித்துக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்ற கருப்பண்ணர், முழுதும் ஈசன் திருப்பணியிலே ஈடுபடும் நல்ல நாளை எதிர் நோக்கியிருந்தபோது தான் நிகழ்ந்தது அந்த அற்புதச் சம்பவம்.

கபடவேடதாரியான ஒரு சந்நியாசி இவரைக் காளிக்கு பலியிட்டு அட்டமா சித்திகளைப் பெற எண்ணி ஒரு நாள் நள்ளிரவு 12 மணிக்கு அம்மாப்பேட்டை ஏரிக்கு இவரை அழைத்துச் சென்றார். அங்கே கருப்பண்ண சுவாமிகளைக் கொண்டே ஒரு பெரிய குழியை வெட்டச் சொன்னார். சந்நியாசி கொடுத்த யந்திரத்தைக் குழியில் வைக்க சுவாமிகள் குனிந்தபோது கபட சந்நியாசி சுவாமியைப் பலி கொடுக்க அரிவாளை ஓங்கினார். அப்போது காளிதேவி பிரசன்னமாகி தம் திரிசூலத்தால் சந்நியாசியைத் தடுத்து ''கருப்பண்ணன் என் பக்தன். அவனால் பல அருட்பணிகள் நடைபெறும் அவனுக்குத் தீங்கு செய்தாயோ நீ தீர்ந்தாய்'' என்று திருவருள் புரிந்தாள். சந்நியாசி நம் சுவாமிகளின் திருவடிகளில் விழுந்து பலவாறாகத் தொழுது புகழ்ந்து கருப்பண்ண சுவாமிகளின் முதல் சீடரானார்.

பிறகு கருப்பண்ண சுவாமிகள் பழநிக்குச் சென்று பழநி முருகரின் திருவருளுக்குப் பாத்திரமானார். பழநி முருகர் ஒரு லங்கோடு தாரியான கிழவராகக் காட்சி அளித்து ''மெய்த்தவ பக்தா! குமரகிரியில் தண்டாயுதபாணி ஆலயம் உன்னால் உருவாகும்.'' என்று அருள் பாலிக்க அவ்விதமே இன்றுள்ள குமரகிரி அருள்மிகு தண்டாயுதபணி சாமி ஆலயத்தைக் கட்டுவித்தார் கருப்பண்ண சுவாமிகள். அம்மாப்பேட்டையிலும் சேலத்திலும் வீட்டுக்கு வீடு, கடைக்குக் கடை, ஆலயத்திருப்பணிக்கு அன்பர்களிடம் பொருள் திரட்டி தம் இடையறா முயற்சியால் சேலத்திற்கு ஒரு பழநியாக பழநிமலையின் தோற்ற வடிவில் ஸ்ரீ குமரகிரி தண்டாயுத பாணி சுவாமி ஆலயத்தை உருவாக்கிய கருப்பண்ண சுவாமிகளின் திருத் தொண்டை எவ்வளவு போற்றினாலும் தகும்.

''சீர் பெற்ற செங்குந்தர் மரபில் தோன்றிச்
சிறப்புற வாழ்ந்து
பேர் பெற்ற சிவநெறியைச் செவ்வனே செய்
தம்தொழிலாம்
தார்சுற்றும் பணியை விட்டுப் பாரோர்
போற்றும் கந்தனருளால்
பேர் பெற்று விளங்கிய கருப்பண்ணாபோற்றி
போற்றி''

குமரகிரி மலை அடிவாரத்தில் கருப்பண்ண சுவாமிகள் சமாதியும், சுவாமிகளின் துணைவியார் ஸ்ரீவள்ளியம்மையார் சமாதியும் சிவலிங்கம், அம்பிகை வடிவாய் இன்றும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றன.

**காசி சுவாமிகள் போற்றிய குமரகிரி**

ஸ்ரீநிஜாநந்த பிரமேந்திர சரஸ்வதி சுவாமிகள் எனப்படும் காசி சுவாமிகள், குமரகிரி மலை அடிவாரத்தில் அமைந்திருக்கும் தியான நிலையத்தில் தங்கியிருந்து குமரகிரி முருகனை நாளும் பரவிப் போற்றியுள்ளார்.

ஸ்ரீ காசி சுவாமிகள் அருளிச் செய்திருக்கும் ஸ்ரீ குமரகிரி முருகன் புகழ் வெண்பா, ஸ்ரீ குமரகிரி முருகன் இரட்டை மணி மாலை, ஸ்ரீ குமரகிரி முருகன் நவமணி மாலை ஆகிய அருள் நூல்கள் குமரகிரி முருகன் அருள் அற்புதத்தை விவரிக்கின்றன.

இவருடைய நூற்றாண்டுவிழா அண்மையில் 1985 ஆம் ஆண்டு கொண்டாடப் பெற்றுள்ளது.

''கொங்குவள நாட்டினிலே குமரமலைச் சேத்தி
ரத்தில்
பொங்குபுக ழோடிருந்த பூரணநற் துறவியாம்
மங்களமாம் புகழ்படைத்த மாண்புடைய
நிஜானந்தன்
தங்கநூற் றாண்டுவிழா தழைத்தோங்க
வேண்டுவனே''

என்று வாகீச கலாநிதி கி.வா.ஜ.அவர்கள் குமரகிரி திருத்தலத்தையும், அத்திருத்தலத்தில் எழுந்தருளியிருந்த சுவாமிகளையும் போற்றிப் பாடியிருக்க காண்கிறோம்.

குமரகிரி முருகன் பக்தர்கள் வேண்டியவற்றை வேண்டியவாறே அருளும் கற்பகம் என்கிறார் ஸ்ரீ காசி சுவாமிகள்.

''பாலதண்ட பாணிப் பரமன் குமரகிரி
கோலநம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
—சீலராம்
வேண்டுவார் வேண்டுவ எல்லாம் கொடுக்கின்ற
காண்தகு கற்பகம் காண்'

ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தை ஒட்டி பத்து நாள் பிரம்மோற்சவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அப்போது சேலம் வாழ் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்திரளாக வந்து குமரகிரி முருகரைத் தொழுவதையும்

''பங்குனி உத்திரத்தில் பல்லாயிரம் பக்தர்
பொங்கும் களிப்பும் பூரிப்பும் — எங்கும்
குலவஇறை தண்ட பாணியின் கோவில்
தலம்சென்று சேவிப்பார் தாம்''

என்று பாடுகிறார் ஸ்ரீ காசி சுவாமிகள். இத்தகைய அருள் வெண்பாக்கள் 333 ஸ்ரீகுமரகிரி முருகன் புகழ் வெண்பாவில் அமைந்து கற்பார்க்குக் கற்கண்டாய் தித்திக்கின்றன.

''ஸ்ரீ குமரகிரி முருகன் புகழ் வெண்பா ஒரு சாதாரண புலவரின் காவியம் அல்ல. அது முருகன் அருள் பெற்ற ஒரு யோகியின்,ஒரு ஞானியின், ஒரு பக்தரின் அருள் வாக்கு என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டா'' என்று சுவாமி தேஜோமயானந்தா போற்றுவதும் இங்கு நினைத்து மகிழத்தக்கது.

ஸ்ரீ காசி சுவாமிகள் தமது 94 வயதில் 1977-ல் தியானநிலையத்தில் குமரகிரி முருகர் திருவடி நிழலை அடைந்தார். அவரது மகாசமாதி அவருடைய அன்பர்களால் அமைக்கப்பட்டும் பேணப்பட்டு வருகிறது. தியான நிலையமும் ஸ்ரீமத் காசி சுவாமிகள் தியான நிலையம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பௌர்ணமியிலும் பௌர்ணமி பூசை இங்குச் சிறப்பாக நடைபெறுவதோடு வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் குருபூஜையும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஸ்ரீ குமரகிரியில் தியான ஆசிரமம் தோற்றுவித்து ஸ்ரீகாசி சுவாமிகளைத் தங்கியிருக்கச்செய்து அருள்ஞானம் தழைக்கச் செய்தவர் திரு சி. இராமலிங்கம் என்ற முருக பக்தர் ஆவார். குமரகிரி முருகரை வழிபடும் அன்பர்கள் தியான ஆசிரமத்தையும் தரிசித்துப் பயன் அடைவராக!

''சடம்உகுத்தான் காசி சுவாமிஎன் றெண்ணாதீர்
உடல்விட்டு உயிரொளி வடிவாய் நின்றான்காண்
அடிவார தியான நிலையத்தில் அருஉரு
வடிவராய் அருள்புரிகின்றான் ஐயன்''

**கண்கண்ட தெய்வம்**

குமரகிரியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பாலதண்டாயுதபாணி சுவாமி நம் ''திருக்கோயில்' இதழாசிரியரின் கண்கண்ட தெய்வமும் ஆவார். ''என்னை வாழ வைத்த தெய்வம் குமரகிரி முருகரே'' என்று நெஞ்சம்அள்ளித் தித்திக்க தித்திக்க தமக்கு குமரகிரி முருகர் அருள் புரிந்த அற்புத வரலாற்றை அவர் விவரிப்பது வழக்கம். அவருடைய கூற்றாகவே அந்த அற்புதச் சம்பவத்தை இங்கே காணலாம்.

''நெசவாளர் குடும்பத்தில் மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த என்னை என் அறியா பருவம் முதலாக ஆண்டு கொண்டு அருள் புரியும் அற்புதத் தெய்வம் குமரகிரி முருகரே. வயிற்றுக் குழிக்காய் தறியின் குழியில் இரவு பகலாக வாடிய என் பெற்றோரால் என்னை படிக்கவைக்க இயலவில்லை. ஆனால் குமரகிரி முருகரை நம்பிய நான் எப்படியோ நல்ல ஆசிரியர்கள்,உள்ளமுள்ள நல்ல மனிதர்கள் சிலர் உதவியால் தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றேன்.

எம்.ஏ. பட்டம் பெற்ற பிறகு அடுத்து என்ன செய்வது என்று என் மனம் அல்லல்பட்டது. அப்போது பல்கலைக் கழகம் தரும் நிதி உதவியோடு டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் யோசனையையும் தெரிவித்து அப்போதைய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர்ந. சஞ்சீவி அவர்கள் ''தமிழ்க் கவிதைகளில் வறுமைப் புனைவு'' என்ற தலைப்பையும் தந்து என்னை விண்ணப்பிக்கச் செய்தார்.

அப்போது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் காலியாக இருந்த இரண்டு ஆய்வு இடங்களுக்கு என்னையும் சேர்த்து மொத்தம் அறுவர் விண்ணப்பித்திருந்ததால் எனக்கு இடம் கிடைக்குமா என்பது ஐயத்திற்கு இடமாகவே இருந்தது. சென்னையிலிருந்து நல்ல பதில் வர வேண்டுமே என்று சேலத்திலிருந்தபடி நான் குமரகிரி முருகரைத் தொழாத நேரம் இல்லை. பாடி உருகாத நேரமும் இல்லை. அன்று ஒரு கிருத்திகை நன்னாள். குமரகிரி முருகரை வழக்கம் போல் வணங்கித் தொழுது ''இன்னும் எனக்கு அருள்புரிய ஏனோ தாமதம்'' என்று உருகி வேண்டி இல்லம் சென்றேன். நான் பட்ட துயரங்களுக்கெல்லாம். முடிவாக தபால்காரர்,ஆய்வு மாணவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தாங்கிய கடிதத்தை என்கைகளில் சேர்த்துச் சென்றார்.

அன்றே நான் பழநிக்குப் போய் பழநி முருகரையும் தரிசித்து, மீளவும் குமரகிரி முருகரையும் வணங்கி வாழ்த்திச் சென்னைக்கு நான் புறப்பட்டு வந்தேன். ஆய்வு மாணவனாக தமிழ்த்துறையில் சேர நான் சென்றேன். அப்போது தான் குமரகிரி முருகர் எத்தகைய திருவிளையாடல் புரிந்து எனக்கு அந்த வாய்ப்பினைப் பெற்றுத் தந்தார் என்பதை நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

எந்தப் பேராசிரியர் எனக்குத் தலைப்பும் தந்து விண்ணப்பம் போடச் சொன்னாரோ அதே பேராசிரியர் அருங்குணச் செம்மல் டாக்டர் சஞ்சீவி அவர்கள் ''உங்களுக்குத் தவறுதலாக உத்திரவு அனுப்பப்பட்டு உள்ளது. உங்களை எப்படி ஆய்வு மாணவராகத் தேர்ந்தார்கள் என்பது எனக்கும் தெரியவில்லை. இரண்டு ஆய்விடங்களுக்கு 6 விண்ணப்பங்கள் வந்தன. விண்ணப்பதாரர் ஆறு பேரை

யும் நான் வரிசைப் படுத்திய முறையில் நீங்கள் 4 வது இடத்தில் தான் இருந்தீர்கள். ஆறு பேரும் ஒத்த மதிப்புடையவர்கள். ஆறு பேரும் ஆய்வு செய்ய தகுதியுடையவர்களே. எனினும் இரண்டு பேருக்கே நிதியுதவி வழங்க முடியும் ஆதலால் முதல் இருவரைத் தேர்ந்தெடுக்கும்படி நான் பதிவாளருக்குப் பரிந்துரைத்தேன். அந்த இருவரில் நீங்கள் ஒருவராக இல்லை. ஆகவே உங்களை நான் ஆய்வாளராக ஏற்க முடியாது'' என்று பேராசிரியர் அவர்கள் தெரிவித்தபோது எதிர்கால பயத்தில் என் உளம் நடுங்கியது. ''குமரகிரி முருகா! என்ன இது சோதனை'' என்று நான் நினைத்துக் கொண்டு ''எனக்கு வந்துள்ள உத்திரவுப்படி நான் சேர வந்துள்ளேன்'' என்றேன். பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் அப்போது துணைப் பேராசிரியராக இருந்த டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களை அழைத்து (இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள்) என் பரிந்துரைக்கு மாறாக இவரை எப்படி தேர்வு செய்தார்கள் என்று பதிவாளரைக் கேட்டு வாருங்கள் என்று அனுப்பினார்கள். அவரும் பதிவாளரை பார்த்து விசாரித்தார்கள். பதிவாளர் கூறியிருக்கிறார். '' நீங்கள் ஆறு விண்ணப்பதாரர்களும் ஒத்த மதிப்புடையவர்கள் என்று தெரிவித்து முதல் இருவரைத் தேர்ந்தெடுக்கக் கேட்டுக் கொண்டீர்கள். நாங்கள் ஒத்த மதிப்புடைய அறுவரில் இருவரை அகர வரிசைப்படி தேர்ந்தெடுத்து விடுவோம் என முடிவு செய்தோம். ஆகவே அகர வரிசைப்படி பார்த்ததில் அமிர்தலிங்கம் முதலாமவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். அவரைநீங்கள் ஆய்வாளராக ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். பிறப்பித்த ஆணையை மாற்ற இயலாது''.

பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள்பேராசிரியர் டாக்டர் சஞ்சீவி அவர்களிடம் இவ்விசயத்தை வந்து தெரிவித்தபோது அதே அறையில் நான் அமர்ந்து இதைக் கேட்டபோது தான் என்னை ஆய்வாளனாகதேர்ந்தெடுக்க 'அகர வரிசையில் தேர்வு' என்ற புது முறைத் தேர்வைத் தேர்வாளர்களின் சிந்தையில் தோற்றிய குமரகிரி முருகன் அருள் விளையாடலும் எனக்குத் தெளிவானது. என்னை எவ்விதத்தடையுமின்றி ஆய்வாளனாக சேர்த்துக் கொண்டிருந்தால் குமரகிரி முருகன் நிகழ்த்திய இந்த அற்புத அருள் விளையாடலின் மகத்துவத்தை நான் அறிந்திருக்கவே முடியாது. ஆனால் பேராசிரியர் என்னை ஆய்வாளனாக ஏற்க மறுக்க, இன்னொரு பேராசிரியர் போய் பதிவாளரிடம் விசாரித்து வந்து விளக்கம் கூற, அதை இருந்து கேட்கவும் பிறகு ஆய்வாளன் ஆகவும் வாய்ப்பு பெற்றதால் தான் எனக்காக எங்கும் இல்லாப் புதுமையாக 'அகரவரிசையில் தேர்வு' என்ற முறையில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் ஆய்வாளனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால், இரவு பகலாக நான் குமரகிரி முருகரை வேண்டி உருகி மன்றாடிய தன் பலன் அல்லவா குமரகிரி முருகர் நடத்திய இந்த அற்புதம். பல்கலைக் கழக ஆய்வாளன் ஆகிப் பிறகு நான் பேராசிரியர் பெருமக்களின் பேரன்பிற்கும் பாத்திரம் ஆகி டாக்டர் பட்டமும் பெற்றேன். இன்று திருக்கோயில் இதழாசிரியனாகவும் நான் இருந்து வருகிறேன். என்றால் இவை எல்லாம் குமரகிரி முருகர் தந்த வாழ்வே ஆகும்''

இவ்வாறு திருக்கோயில் இதழ் ஆசிரியரின் கண் கண்ட தெய்வமாக அவருக்கு அருள் புரிந்து அவரது சிந்தையே கோயிலாக என்றும் குடியிருந்து அருள் பாலித்து வருபவரே குமரகிரி முருகர்

## உடல் யாருக்கு உரியதோ?

**இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே**

**ஒருத்தருக்கும் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி**

**நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்க்கழுகு**

**தம்மதென்று தாமிருக்குந் தான்.**

—பட்டினத்தார்

ஆவார். அவரை நீங்களும் கண்டு தொழுது வேண்டுங்கள். கோருவனவெல்லாம் குறையின்றிக் கிடைக்கும்.

குமரகிரி வாழும் குழந்தை முருகன்
நமதிடம் அன்புமிக நாட்டி — எமதுள்ளம்
ஆனந்தம் பொங்க அணைத்தான் படியேறி
வானவர் போற்றவே வந்து!

### எத்தனை எத்தனை அற்புதங்கள்

பாத்திரங்களைத் தலையில் வீதிவீதியாக விற்ற ஒரு பக்தர் இன்றுசேலத்தில்கோடீஸ்வராகவாழ்ந்து கொண்டிருக்கிறார். அது மட்டுமல்ல குமரகிரி முருகருக்கும் பல லட்சக்கணக்கான ரூபாயில் திருப்பணிகளையும் கூட அவர் இன்று செய்து கொண்டிருக்கிறார் என்றால் முருகர் தம் பன்னிரு கண்களில் ஒன்றிரண்டு கண்கள் மலர்ந்தாலும் போதாதோ பக்தர்களின் வாழ்வு உயர்வதற்கு.

குமரகிரி முருகரை ஒரு முறை தரிசித்தவருக்கும் அவரை மீளவும் மீளவும் தரிசிக்க ஆவல் ஏற்படுவது இயற்கை. சேலத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்த போது குமரகிரி முருகரைத் தரிசித்து பரவசப்பட்ட ''மஞ்சரி' இதழின் ஆசிரியர் திரு இலக்குமணன் என்பவர் ''குமரகிரி தந்த கதம்பச் சரம்'' எனும் தலைப்பில் பக்திப் பனுவல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார்.


''நாடிச் சென்றேன் செம்பொருளை
நன்றே குமரன் கிரியெங்கும்
தேடிச் சென்றே நின்றேனே
தெய்வக் கோலம் கண்டேனே''
''கடவுள் குமரன் கிரியேறிக்
கலிகள் அகலப் பெறலாமே''

என்று பாடிப் பாடிப் பரவசப் படுகிறார் அவர்.

இவ்வாறு பக்தர்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ளலாய், கலி தீர்க்கும் கண்கண்ட தெய்வமாய்த் திகழும் குமரகிரி முருகரைக் கண்ணாரக் கண்டு தொழ அன்பர்களே நீங்களும் இப்பொழுதே புறப்படுங்கள் சேலத்திற்கு.

''சீர்சால் தியான நிலையத்தின் தெற்காக
ஓர்பால் குமரகிரி ஓங்கல்மேல் — மாதவர்கள்
செல்லவும் பாலதண்ட பாணியைச் சேவிக்கவும்
நல்லதலம் செய்தார் நாடு''.

# சீர்காழி முத்துத்தாண்டவர்



(சென்ற இதழின் தொடர்ச்சி)

**இலக்கியப் பேரறிஞர் மு. அருணாசலம்**

கோயிலில் வாத்தியம் வாசிக்கின்ற மேளக்காரருக்குப் பொருட்கவலையே இராதபடி சோழமன்னர் பண்டைக்காலத்தில் எல்லா மானியங்களையும் வழங்கி இருந்தனர். அவர்களுக்கு நெடுங்காலம் பின்னர் அதே பரம்பரையில் வந்து நடராசப் பெருமானைப் பாட முற்பட்ட முத்துத் தாண்டவருக்கும் பெருமானே பொற்காசு வழங்கியது நாம் அறிந்து மகிழற்பாலது.

மறுநாளும் முத்துத்தாண்டவர் சீர்காழியிலிருந்து சிதம்பரம் வந்து காலையில் தரிசித்துப் பணிந்தபோது கூடியிருந்தோரிடையே 'சேவிக்க வேண்டும்' என்றொரு குரல் எழுந்தது. அதையே தொடக்கமாக வைத்து இவா ஒரு புதுக் கீர்த்தனம் பாடினார் (ஆபோகி, ஆதிதாளம்)

பல்லவி

சேவிக்க வேண்டுமையா-சிதம்பரம்
சேவிக்க வேண்டுமையா (சேவிக்)

அநுபல்லவி

சேவிக்க வேண்டும் சிதம்பரமூர்த்தியாம்
தேவாதிதேவன் திருச்சந்நிதி கண்டு (சேவிக்)

சரணம்

காரானை மாமுகத்து ஐந்து கரத்தானை
கற்பக ராயனை முக்குறுணி யானைச்
சீரார் புலியூர்ப்பதி மேலை வாசல் வாழ்
தேவர் சிறைமீட்கும் சேவற்கொடியானை
(சேவிக்)

பாடி முடித்துத் திருநீற்றுப் பிரசாதத்தையும், பொற்காசுப் பிரசாதத்தையும் பெற்றுக்கொண்டு, மாலையில் சீர்காழி திரும்பிவிட்டார். இந்தக் கீர்த்தனத்தில் நான்கு சரணங்களைஅமைத்திருக்கிறார். அன்றியும் கற்பக விநாயகர், முக்குறுணி விநாயகர், புலியூர்ப்பதி, மேலை வாசலில் உள்ள சேவற்கொடியோன், சிவகங்கை, சிவகாமி, அம்பிகை, திருமூலட்டானம், சிற்றம்பலம், பேரம்பலம், ஆனித்திருமஞ்சனம், மார்கழி தரிசனம் முதலான பல தலச் செய்திகளை இங்கே குறிப்பிடுகிறார். இவ்வாறு நாள் தோறும் வந்து இவர் தினம் ஒரு கீர்த்தனமாகப் பாடிய கீர்த்தனங்கள் பல நூறு ஆகும். ஒவ்வொன்றிலும் அரிய சமயச் செய்திகளையும் கலைச் செய்திகளையும் புராணச் செய்திகளையும் தவறாமல் அமைத்துப் பாடியிருக்கிறார்.

பின்வரும் கீர்த்தனத்தில் 'தன்னை அறிவதுவே உண்மையான மெய்ஞ்ஞானம்' என்ற சிறப்பான சைவ சித்தாந்த அத்துவிதக் கருத்தை அழகாகச் சொல்கிறார் (ஆபோகி, ரூபகதாளம்)

பல்லவி

என்னை எனக்குத் தெரியச் சொல்வாய் தில்லைப்
பொன்னம்பலத் தரசே (என்னை)

அநுபல்லவி

தன்னை யறியும் அறிவதுநீ சற்றும்
தப்ப ஒண்ணாதிப்போ சாமி சமயம் (என்னை)

சரணம்

பூதமும் நானல்ல பொறிபுலன் நானல்ல
ஓதும் அநாதி ஒரு நான்கும் நானல்ல
போதக் கருவி புறம்பல்ல உள்ளல்ல
வாதமும் நானல்ல வென்று மயங்கும் (என்னை)

இதுபோல மற்ற சரணங்களும், இங்கு மனவாசகம் கடந்தார் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான உண்மை விளக்கத்துள் 'வேறாகா என்னை எனக்கறியக் காட்டீர்?' என்று கேட்கும் கருத்து பயின்று வருவது காணத்தக்கது. இவர் சாத்திரங்களை நன்கு ஓதியிருப்பார். அல்லது திருவருளால் அவற்றை இவர் நன்கு உணர்ந்திருக்கவும் கூடும்.

இவ்வாறு பலநாள் நிகழ்ந்து வருங்காலத்தில் ஒரு நாள் சீகாழியில் இருந்து புறப்பட்டுத் தில்லையை நோக்கி நடந்து கொள்ளிடக்கரையை அடைந்தார். கொள்ளிடத்தில் பெருவெள்ளம் பிரவாகமாக ஓடிக்கொண்டிருந்தது. பிரவாகம் இவர் இறங்கி அக்கரை வரமுடியாதபடி தடுத்துவிட்டது. அப்போது இவர் மிகவும் வருந்தி இரண்டு கீர்த்தனங்கள் பாடினார். முதலாவது 'காணாம லிருந்தாலென் கலக்கம் தெளியாதே' என்ற பல்லவியுடையது (கல்யாணி ஏக தாளம்). சிறிது நேரம் அதைப் பாடி முடித்தபின் நடராச தரிசனம் இல்லாமல் பொழுது விணாய் கழிகிறதே என்று மனம் வருந்திக் 'காணாமல் வீணே கழித்தேனே' என்று மற்றொரு கீர்த்தனமும் பாடினார் (த்ன்யாசி-சாபு தாளம்)

பல்லவி

காணாமல் வீணிலே
காலம் கழித் தோமே (காணாமல்)


அநுபல்லவி

சேணாடர் போற்றும் தில்லைச்
சிதம்பரஸ்தலத்தைக் (காணாமல்)

சரணம்

சேரன் சோழன் பாண்டியன்
இரணியன் செய் கோபுரமும்
சூரன் வீரப்ப பூபன்
செய்த திருமதில்களும்
பாருலகும் போற்றுகின்ற
பஞ்சாட்சரப் படிகளும்
ஆரணங்கள் சூழந்த திரு
ஆயிரங்கால் மண்டபமும் (காணாமல்)

இங்கே இவர் சம்பிரதாயமாகச் சேரன் சோழன், பாண்டியன், இரணியவன்மன் கோபுரங்கள், சூர



வீரப்ப பூபன் செய்த திருமதில்கள் என்று குறிப்பிடுகிறார். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் வெள்ளம் வடிந்தது. இவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து கொள்ளிட நதியைக் கடந்து வடகரைக்கு வந்தார்.

''எவ்வாறு கடந்து வந்தார்' எனபது வரலாற்றில் சொல்லப்படவில்லை,. அக்காலத்தில் மக்கள் உடல் வலிமை மிக்கவர்களாய் வாழ்ந்தார்கள். இவர் பெரும்பகுதி வெள்ளம் வடிந்ததும் இறங்கி நீந்தியிருக்கலாம். அல்லது பிரவாகம் குறைந்து ஓடம் தலைப்பட்ட உடனே ஓடத்திலே ஏறியும் வந்திருக்கலாம்.

வடகரையை அடைந்தவர் எஞ்சியுள்ள சிறிது தூரமும் நடந்து சென்றார். நடராசரைத் தரிசனம் செய்யப்போகும் மனக்களிப்பினால் வசந்தராகத்தில் (ஆதிதாளம),

தரிசனம் செய்வேனே-முத்தி கொடுக்கும்
பொன்னம்பல வாணனை (தெரி)

என்ற பல்லவி உடைய கீர்த்தனம் பாடிக்கொண்டே வந்தார். கோயிலை அடைந்து கனகசபையுட் சென்று மலயமாருதத்தில் (ரூபகதாளம)

''கண்டபின் கண்குளிர்ந்தேனே - ஜனனக்
கடலைக் கரை கடந்தேனே''.

என்ற பல்லவியுடைய கீர்த்தனம் பாடினார். இவ்வாறு நெடுநாள் நிகழ்ந்து வந்தது. ஒருநாள் இவர் சபையில் நின்று யாரிடத்திலேனும் ஒரு சொல் பிறக்க வேண்டும் என்று எண்ணி அதற்காகக் காத்திருந்தபோது, சபாநாதர் கருணையால் ஒருவரும் ஒரு சொல்லும் சொல்லவில்லை. ஒரே அமைதியாக இருந்தது. அப்போது முத்துத்தாண்டவர், சூரிய காந்த ராகத்தில் 'பேசாதே நெஞ்சமே' என்ற சொற்சுருங்கிய பல்லவியுடைய கீர்த்தனத்தைப் பாடினார்.

பல்லவி

பேசாதே நெஞ்சமே - பேசாதே

அநுபல்லவி

பேசாதே நெஞ்சமே
பேசியும்தான் என்னகண்டாய்
ஈசர் புலியூரில் வளர்
நேசர் அநுபூதி யல்லால் (பேசா)

மற்றொரு நாள் அதிகாலையில் வந்து கொண்டிருந்தபோது இவரை வழியில் ஒரு நச்சுப்பாம்பு தீண்டிவிட்டது. இவர் தனியே எப்போதும் போவது வழக்கமாதலால் அருகில் துணைக்கு யாருமில்லை. ஆனால் இதன் பொருட்டு இவர் சிறிதும் பதறவில்லை. 'அம்பலத்தில் ஆடுகின்ற பெருமானே மருந்து' என மனத்தில் உறுதி கொண்டு ஒரு கீர்த்தனம் பாடினார். (காம்போதி-ரூபகதாளம்)

பல்லவி

அருமருந்தொரு தனிமருந்திது
அம்பலத்தே கண்டேனே

அநுபல்லவி

திருமருந்துடன் பாடும் மருந்து
தில்லையம்பலத் தாடும் மருந்து
இருவினைகள் அறுக்கு மருந்து
ஏழையடியார்க் கிரங்கும் மருந்து (அரு)

சரணங்கள்

1. கொன்றை தும்பை மணியணிந்த மருந்து
கோவை மீதிற் படர்ந்த மருந்து
மன்றுளேநின் றாடும் மருந்து
மாணிக்கவாசகர் கண்ட மருந்து

2. இந்திர ரானவர்வானவர் போற்றும்
இருடிகள் தமக் கெட்டா மருந்து
சந்திர சூரியர் காணா மருந்து
தானே முளைத்துத் தழைத்த மருந்து (அரு)

திரித்தி தித்தியென் றாடும் மருந்து
தேவாதி மூவர்கள் காணா மருந்து
கருத்தைத் திருத்தி இருத்தும் மருந்து
காலனைக் காலால் உதைத்த மருந்து (அரு)

பாடத் தொடங்கிய உடனேயே விஷம் இறங்க ஆரம்பித்தது. பாடல் முடிந்தவுடன் அவருக்கு எல்லா விடமும் நீங்கி எந்த அயர்ச்சியுமில்லாது முன்போலவே வலிமையோடு நடக்கலானார். இக் கீர்த்தனம் இன்றுகூட சபைகளில் பாடப்பெறு கின்ற அரிய கீர்த்தனம். முத்துத்தாண்டவருக்குப் பிற்காலத்திலும் இது நாடெங்கும் மிகவும் பிரசித் தமாய் வழங்கிற்று.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க சுவாமிகள் இறைவனே மருந்து என்ற கருத்தைப் புள்ளிருக்கு வேளூரில் இறைவன் திரு நாமமாகிய வைத்தியநாதன் என்ற பெயரோடு பொருத்தி "நல்ல மருந்திம் மருந்து சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து" என்ற பல்லவியுடைய அரிய கீர்த்தனமாகப் பாடியிருப்பதை இசை ரசி கர்கள் எல்லோரும் அறிவார்கள்.

இவ்வாறு ஏராளமான கீர்த்தனங்களைப் பாடிப் பழகிய முத்துத்தாண்டவருடைய நெஞ்சம் அகத்துறையிலும் பாட எண்ணியது போலும். இவர் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அது காரணமாக இவர் சிறுமிகள் கூற்றாகவும், காதல் துறையிலும் பக்தியோடு அவர் பாடிய பாடல்களில் மிகவும் ஈடு பட்டிருக்கிறார். இதனால் இவர் தாமும் கீர்த்தனங் களைப் பக்தியோடு காதல் துறையிலும் அமைத் துப் பாடலாம் என்ற துணிவு கொண்டார். இவ் வாறு பாடிய கீர்த்தனப் பாடல்கள் பதம் எனப் பெயர் பெறும். இவ்வாறு இவர் பாடிய பதங்கள் அநேகம். இவையும் கீர்த்தனங்களைப் போலவே பிரசித்தி பெற்றன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம் (தோடி-ஆதிதாளம்)

பல்லவி

தெண்டனிட்டே னென்று சொல்வீர்-நடேசர்க்கு
நான் தெண்டனிட்டே னென்று சொல்வீர்.
(தெண்ட)

அநுபல்லவி

அண்டமெல்லாம் பரவு
கொண்டல்காள் கும்பிட்டேன்.
ஆண்டவரெனும் தில்லைத்
தாண்டவராயர் முன்போய் (தெண்ட)

சரணங்கள்

1. பொருந்தும் காதல் கொண்டு
பொன்னிதழ்த் தேனுண்டு
இருந்தோம் சொல்லவோ விண்டு
ஏகாந்தம் தனிற் கண்டு (தெண்ட)

2. கண்டால் வரும பேச்சு
கன்னி வயதில் ஏச்சு
பண்டு சொன்னதும் போச்சு
பார்வையென் மேலாச்சு (தெண்ட)

3. மன்னும் நாணம் போக்கி
மனத்தைத்தாள் மலர்க் காக்கி
சென்னி மேற்கரங்கள் தூக்கித்
தில்லைப் பதியை நோக்கி (தெண்ட)

இந்தப் பதம் தாண்டவருக்குப் பின் மிக்க பிரசித்தி பெற்றிருந்தது. இதைத்

"தெண்டனிட்டேனென்று சொல்லடி-சாமிக்கு
நான் தெண்டனிட்டே னென்று சொல்லடி"

என்று பாடியிருக்கின்ற பிரசித்தி பெற்ற இராம லிங்கசுவாமி கீர்த்தனத்தினால் நாம் நன்கறிய லாம்.

**முத்திப்பேறு:**

இவ்வாறாக முத்துத்தாண்டவர் நெடுநாள் கீர்த்தனங்களும் பதங்களும் பாடிக் கொண்டிருந் தார். இவர் சபாநாதரையன்றி வேறு யாரையும் பாடியதில்லை. எண்பது வயதுக்கு மேல் வாழ்ந்தி ருந்தாரென்பர். மாணிக்கவாசகரிடத்து இவருக்கு மிக்க ஈடுபாடு என்று குறிப்பிட்டோம். இவருடைய முடிவும் அவரைப் போலவே அமைந்தது. இறுதியில் ஒரு நாள் இவர் காலையில் நடராச தரிசனம் செய்தபோது மாணிக்கவாசகரையே நினைத்துப் பாடினார். அன்று ஆனி மாதம் மகநட்சத்திரம், மாணிக்கவாசகர் பேறு எனக்குத் தரவல்லாயோ, என்று இவர் பாடினார். (கோகிலப்பிரியா- ரூபக தாளம்).

பல்லவி

மாணிக்கவாசகர் பேறெனக்குத்
தர வல்லாயோ அறியேன் (மாணிக்)

அநுபல்லவி

காணிக்கை யாகக் கொடுத்தேன்
உனக்கென்னை
ஆணிப்பொன் தில்லை
யம்பல வாணா (காணிக்)

நடராசப் பெருமானுடைய பெரும் திருவிழா நாளாகிய திருவாதிரைத் திருநாளில் ஏற்றுகின்ற அளவில்லாத கற்பூரங்களெல்லாம் கரைந்து அகண் டத்திலே கலந்து விடுவது போல, தாமும் உடலோடு அவனுடைய திருச்சபையில் கரைந்து கலந்து கொள்ள வேண்டும் என்று பாடினார். அவருடைய வேண்டுகோளைச் செவிமடுத்த பெருமானுடைய திருவருளால் சிற்சபையில் ஒரு சோதி உண்டா யிற்று. அந்தச் சோதியில் இவர் கலந்து தாம் விரும் பினபடி மாணிக்கவாசகர் பேற்றையும் பெற்று விதேக முக்தி அடைந்தார்.

**காலம்**

இவ்வரலாறு பழமையாக 1852-இல் அச்சிட்ட முத்துத் தாண்டவர்கீர்த்தனத்தில் உள்ளபடி அதை தழுவி எழுதப்பட்டது. அப்பதிப்பில் இவருடைய காலம் 250 ஆண்டுகளுக்கு முன் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதன்படி கணக்கிட்டால் பிறந்தகாலம் 1600-ஐ ஒட்டியிருக்கலாம். சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் நூல்களை அச்சிட்டவர்கள் காலத்தைத் திரித்துச் சொல்வதில்லை. பரம்பரை யாக வந்த செய்திகளையும், உண்மையாகத் தாங்கள் அறிந்தவற்றையும் மட்டுமே சொன்னார் கள். ஆதலால் அங்குக் குறிப்பிட்டுள்ள காலக் குறிப்பு எல்லா விதத்திலும் ஏற்கத்தக்கதே. எங்ஙன மாயினும் முத்துத்தாண்டவர் கி.பி.1600-க்கு முன் வாழ்ந்தவர் என்பது உறுதி (1560-1640).

# மனம் போல வாழ்வு

பி.கே. பொன்னம்பலநாதன், எம்.ஏ.,பி.எட்.,பி.லிட்.,

மனத்தை உடையவன் மனிதன். மனிதன் அடையும் நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று அவனது உள்ளத்திலேயே இருக்கிறது. அங்கே குடி கொள்ளும் எண்ணங்களே புறச் செயல்களாக வடிவெடுக்கின்றன. எண்ணங்களே செயல் வடிவம் பெறுவதால் நமது எண்ணங்கள் நல்லனவாகவும் உயர்வாகவும் இருத்தல் வேண்டும் என்பது போதரும்.

நல்லது தீயது என்பதைச் செயலை மட்டும் வைத்துப் பார்த்து முடிவு செய்யக்கூடாது. என்ன கருத்தில் செய்யப்பட்டது என்பதை வைத்தே தீர்மானிக்க வேண்டும். மலரிட்டு இறைவனை வணங்குவது சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள முறையாகும். ஆனால் மலர் தூவிய மாறனைச் சிவபிரான் எரித்துவிட்டார். காரணமென்ன? மன்மதன் எண்ணம் தவறானது. அவன் சிவபெருமானை மயக்குவதற்காக மலர்க்கணை சொரிந்தான்.

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது
ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க-ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நண்ணுதல் ஒண்கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு''

என்பார் சிவப்பிரகாசர்.

''செல்லாரும் பொழில் புடை சூழ்புலியூரம்பல
**வாணதேவ[illegible] உம்மை**
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும்
கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரெண்ணியருள் ஈந்ததென்ன
இகழ்ச்சி யொன்றும்
சொல்லாமல் மலரால் விட்டெறிந்தானைக்
காய்ந்ததென்ன சொல்லீசரே''

என்று சிவபெருமானை வினவினார் ஒரு புலவர்.

புண்ணிய பாவம் என்பது செயலினால் இல்லை; அவை என்ன கருத்தில் செய்யப்படுகின்றன என்று பார்த்துத்தான் முடிவுசெய்ய வேண்டுமெனபதற்கு

''தீதில்லை மாணிசிவகருமம் சிதைத்தானை
காதியும் வேதியன் தாதைதனைத்தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'',
என்ற திருவாசகமே சான்றாகும்.

பொய்சொல்வது பாவம் என்பது பொதுவான கருத்தாகும். ஆயினும் சில சமயங்களில் பொய் சொல்வதால் புண்ணியமும், பொய்கூறாமையால் பாவமும்கூட விளைவதுண்டு என்பதையும் நோக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மூலமாயிருப்பது மனமே ஆகும். ஒருவனை அறிஞனாக்குவதும் மூடனாக்குவதும் தூயவனாக்குவதும் தீயவனாக்குவதும் பாவியாக்குவதும் புண்ணியவானாக்குவதும் அவனது மனமே. நாம் வயலில் எந்த விதையை விதைக்கின்றோமோ அந்த விதைதான் விளைந்து நம் வீட்டுக்கு வந்து சேரும். கம்பு விதைத்துவிட்டுச் சோளத்தை எதிர்பார்க்கலாமா? நாம் பிறருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையே விளையும். செயல் நல்லதாக இருந்தால் விளைவும் நல்லதாகவே இருப்பது இயற்கை நியதியல்லவா? தீமையைச் செய்து விட்டு நன்மையை எதிர்பார்ப்பது முரண்பாடல்லவா? ''கெடுவான் கேடு நினைப்பான்''. ''வினைவிதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்.''. என்பவை பழமொழிகள்.

''ஐங்காதம் ஓடினும் தன் வினைகள் தன்னோடு அடையாமல் நீங்கி விடுமோ'' என்பது குமரேசசதகம். நம் செயல்கள் எல்லாம் முதலில் எண்ணங்களாகத்தான் உதிக்கின்றன. செயலின் வித்து நினைப்பு. நினைப்பு நல்லாயிருந்தால் செயல் செம்மையாயிருக்கும். எண்ணம் பழுதுபட்டால் எடுத்தது நிறைவேறாது.

விதையில் இருப்பது எதுவோ அதுவே மரமாகப் பரிணமிக்கிறது. நமக்கு மனத்தில் இருக்கும் எண்ணமே வித்து, வெளியுலகில் தென்படும் இன்ப துன்பங்களே அதன் விளைவு. மனத்தில் இல்லாததை வெளியில் காண முடியாது. மனத்தை நல்ல மனமாக மாற்றுமளவுக்கு வெளியுலகம் நல்லதாக தோற்றமளிக்க வேண்டும்.

துரியோதனனும் யுதிட்டிரனும் ஒரே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம். துரோணர் என்ற ஒரே குருவிடம் கல்வி பயின்றவர்களே. ஆயினும் குருவின் ஆணைப்படி நல்லவன் யாராவது உண்டா என்று உலகில் தேடிப்பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் ஒருவனும் தென்படவில்லை. யுதிட்டிரனுக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதே நேரத்தில் அகப்படவில்லை. நன்மையும் தீமையும் எங்கே இருக்கின்றன? அவரவர் மனத்தில்தான் என்பது இக்கதையால் விளங்குகிறதல்லவா?

முன் எண்ணியது பின் விளைகிறது. எந்த எண்ணமும் வீண்போவதில்லை. விலக்க முடியாத வல்வினையென்பது முன் எண்ணியதீய எண்ணங்களே. வேண்டப்படும் நற்பயன் என்பது முன் எண்ணிய நல்லெண்ணங்களே. வினையும் வினைப் பயனும் காரண காரியமாக வந்தடைகின்றன. வினைப்பயன் என்பது எண்ணும் எண்ணத்தில் இருக்கிறது. நல்லனவே எண்ணி நல்லனவே பேசி நல்லனவே செய்பவன் வாழ்வு சிறப்பாக அமைகிறது. எவன் ஒருவன் தன் மனத்தை அடக்குகிறானோ அவனால் இந்த உலகத்தையே அடக்க முடியும் என்று சாத்திரங்கள் சொல்லுகின்றன. பஞ்சேந்திரியங்களில் முதன்மை வகிப்பது மனம். மனத்தின் கட்டுப்பாட்டில்தான் ஐம்பொறிகளும் செயல்படுகின்றன. புலன்களைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் மனத்துக்கண் இயல்பாகவே அமைந்துள்ளது. அவ்வாற்றலே ''வில் பவர்'' எனப்படும் மனவுறுதியாகும். இதையே வைராக்கியம்என்றும் சொல்லுவர். ஒன்றைச் செய்யும்போது மற்றொன்றை நினைக்கக்கூடாது.



கீழ் நோக்கி ஓடுவதே தண்ணீரின் இயல்பு. ஆனால் சூரியனது கிரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அதுபோன்றே மனித மனமும் புலன் இன்பங்களை நாடுவது இயற்கை. ஆனால் கடவுளது அருளானது, மனத்தை உயர்ந்த பொருளை நாடிச் செல்லும்படி உயர்த்திவிடும்.

மனத்துக்கு மூன்று அடிப்படைத் தன்மைகள் உள்ளன:- 1. சத்துவ குணம்; தூய்மையும் மேன்மையான சிந்தனையும் கொள்ள உதவுவது. 2. ராஜஸ குணம்; ஆசைகளை வளர்த்து செயல் வேகத்தையும் துடிப்பையும் உண்டாக்குவது 3. தாமஸ குணம்; மெதுவாகச் செயல்படும் சோம்பல் குணத்தையும் மந்த நிலையையும் வளர்ப்பது. ஆகவே மனத்தில் ஓடும் எண்ண ஓட்டங்களைப் பொறுத்தே ஒருவனது வாழ்க்கை அமைகிறது என்பதும் தோல்வி தரும் எண்ணங்களையே எப்போதும் நினைத்து வருபவனுக்கு வாழ்க்கையில் வெற்றி கிட்டுவதில்லை என்பதும் மனோத்தத்துவ நூலார் கூறும் உண்மையாகும். ஆகவே உயர்ந்த எண்ணங்களையே எண்ணுவோம்.

> ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்று அது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து.''

''யத்பாவம் தத் பவதி'' என்பது வேதவாக்கு. மனிதனே நீ எதுவாக எண்ணுகிறாயோ அதுவாக நிச்சயம் ஆவாய் என்று வேதம் செப்புகிறது. நமது எண்ணங்களுக்கு வலிமை அதிகம். நினைப்பது நடக்கும்.

> ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
> திண்ணியர் ஆகப் பெறின்.''

என்பது திருக்குறள். ஆகவே நல்லதையே நினைப்போம். வாழ்க்கைச் சக்கரம் நம்பிக்கையை அச்சாணியாகக் கொண்டுதான் சுழல்கிறது.

கடவுள், நாம் விரும்பியதை அளிக்கும் கற்பக விருட்சத்தைப் போன்றவர்.

யாத்திரை சென்ற ஒருவன் களைப்படைந்து ஒரு மரத்தடியில் நின்றான். தான் கற்பக மரத்தடியில் இருப்பது அவனுக்குத் தெரியாது. இங்கே இளைப்பாற மென்மையான படுக்கை கிடைக்குமானால் சுகமாக இருக்கும் என்று நினைத்தான். நினைத்தவுடன் அழகான படுக்கையொன்று அவன் அருகில் வந்தது. வியந்து நின்ற அவன் அதில் படுத்துக் கொண்டான். தன் கால்களைப் பிடித்து விட பெண்ணொருத்தி இருந்தால் நன்றாயிருக்குமே என்று நினைத்தான். நினைத்தவுடன் ஒரு பெண் அவன் கால்மாட்டில் உட்கார்ந்துஅவன் பாதங்களை வருடிக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அவனுக்குப் பசி உண்டாயிற்று. சுவையான உணவு கிடைக்காதா என்று நினைத்தான். உடனே அருமையான பலகாரங்கள் நிறைந்த தட்டு அவன் முன் இருந்தது. அவன் வயிறார உண்டான். உண்டபின் படுத்துக் கொண்டான். நடந்தவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தான். திடீரென்று ஒரு புலி தோன்றி தன்னைக் கொன்று விடுமோ என்று நினைத்தான். நினைத்த அளவில் ஒரு புலி அவன் முன் தோன்றி அவன் மீது பாய்நது கழுத்தை நெறித்துவிட்டது. அவன் மாண்டு போனான். இது இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன கதைகளுள் ஒன்று. இக்கதையின் மூலம் அறிய வேண்டிய நீதி நாம் எப்பொழுதும் நல்லதையே எண்ண வேண்டும் என்பது ஆதலால் தான் அமர கவி பாரதியும்,

> எண்ணிய முடிதல் வேண்டும்.
> நல்லவே எண்ணல் வேண்டும்
> திண்ணிய நெஞ்சம் வேண்டும்
> தெளிந்த நல்லறிவு வேண்டும்

என்றும்,

மனத்திலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

என்றும் பாடினார்.

எதை நிகழக்கூடாதென்று நினைக்கின்றோமோ அது சில சமயம் நிகழ்ந்து விடுகின்றது. ஆதலால் நாம் நல்லதையே நினைக்க வேண்டும். தீயதை அது வேண்டாம் என்ற முறையில் கூட நினைக்க லாகாது.

மனித மனத்தில் காமம், குரோதம் முதலான மிருக குணங்களும் உண்டு. அன்பு, அமைதி, அடக்கம் முதலான தெய்வப் பண்புகளும் உண்டு. விலங்கு குணங்களைப் படிப்படியாக ஒழித்து தெய்வப்பண்புகளை வளர்க்க வேண்டும். மனத்தை எப்போதும் கடவுள் மீது வைத்திருப்பவன் வேறு சாதன முறைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை என்பது பெரியோர் கருத்து.

வடநாட்டிலுள்ள பெண்மணிகள் ஒன்றின் மேல் ஒன்றாக நாலைந்து தண்ணீர்க் குடங்களைத் தலைமேல் வைத்து நடந்து செல்லும்போது உடன் வருகின்ற பெண்களுடன் தங்களுக்குள்ள இன்ப துன்பங்களைப் பற்றி பேசிக் கொண்டே போவார்களாம். ஆனால் அவர்களுடைய சிந்தையெல்லாம் குடங்களின் மீதே நிலைத்திருக்குமாம். அவ் வண்ணமே நன்னெறியிற் செல்லுகின்ற மனிதனும் தன் சிந்தையை எப்போதும் நிலைதவறாது உண்மை வழியில் நிறுத்த வேண்டும் என்பது இராம கிருஷ்ணரது அறிவுரையாகும். இவ்வுலக ஆசைகளின் நடுவே இருந்து கொண்டே பக்தி சாதனைகள் செய்து மனத்தை அடக்கி ஆள்பவனே உண்மை வீரனாவான். ஜனக மன்னர் தம் சிந்தையை ஈசனிடத்து வைத்து உலகப்பற்று இல்லாமல் அரசாட்சி புரிந்து இவ்வுலக இன்பங்களை நுகர்ந்தார் என்பது இராமாயணம் சொல்லும் உண்மையாகும்.

மனித வாழ்வு அவனுடைய மனத்தின் நலத்துக்குத் தக்கவாறே அமையும்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்'' என்றார் வள்ளுவனார். நாம் செய்யும் செயல்களை மட்டுமே இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்று கருத வேண்டாம். நம் செயலுக்கு மூலமானது சிந்தனை. எனவே நம்எண்ணம் தூய்மையானதாக இருக்க வேண்டும். நம் எண்ணத்தை எவரும் அறிந்து கொள்ள முடியாது என்று நினைத்துக் கொண்டு தீமையான எண்ணங்களைத் துணிந்து எண்ணுகின்றோம். தீய எண்ணங்களை வளர்க்கின்றோம். ஆனால் நம் உள்ளத்தில் ஒளிரும் இறைவன் கருத்திலும் இருக்கிறான். கண்காணியாக இருக்கிறான். ஆதலால் கருத்திலே கள்ளத்தை இருத்த வேண்டாம் என்கிறார் திருமூலர்.

கண்காணியாகவே கையகத்தே எழும்
கண்காணியாகக் கருத்துள் இருத்திடும்
கண்காணியாகக் கலந்து வழி செய்யும்
கண்காணியாகிய காதலன் தானே

என்பது அவர் அருளிய திருமந்திரம்.

மாசுடைய மனத்தினர் நினைத்த கருமங்கள் கை கூடுவதில்லை. மாசிலா மனத்தினர் நினைத்த கருமங்கள் யாவும் தெய்வத்தின் அருளால் இனிது நிறைவேறும். நல் மனம் படைத்தவர்க்கு நல் வாழ்வு அமைவது கண்கூடு. மனம் போல வாழ்வு என்பது முக்காலும் உண்மை.

**மண்பொறை சுமந்தான்**
**பிரம்படி பட்டான்**
**எல்லாம் எதற்காக?**
**பக்தரின் பேரன்பிற்காக!**

கடல்நிற வண்ணன் கண்ணோன் நிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநாயகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்ந் கோதைச்

சுரிகுழற் கருங்கண் துணைவியை யளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயி ருதவியும்
நென்முனை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்

அகப்படும் அணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி யரிவாள் லூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடைமோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்

தந்தையைக் கடிந்தும் மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதின் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்

பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!

பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்

நின்னைத் தொண்டனென்னக் கொண்டனன்
இருக்கும் அடுக்கல் அரக்க னெடுப்ப
முலைபொர வரைபொருமொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ்வோனே.

—நால்வர் நான்மணிமாலை

அன்பர்களின் பக்தியைச் சோதித்து அருள் புரியும் சிவபெருமான், தம் பக்தர்களின் துன்பத்தைப் போக்கிட தாமும் பல சோதனைகளுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்கிறார். மாணிக்கவாசகருக்காக தம் திருமுடியில் மண் சுமந்தும், பாண்டியனின் பிரம்படி பட்டும் ஆண்டவன் காட்டிய வான்கருணையை வியந்து போற்றியிருக்கிறார் இப்பாடலில் சிவப்பிரகாச சுவாமிகள்.


திரௌபதியைத் திருமணம் புரிந்து
அத்தினாபுரம் திரும்பிவரும்
பாண்டவர்களை மக்கள் மிக
உற்சாகமாக வரவேற்கிறார்கள்
வாரணாவதத்தில் நீங்கள் தீயில் சிக்கப்பட்டு
மாண்டுவிட்டீர்கள் என்று கேள்விபட்டு எப்படி
நான் துடிதுடித்துப்போனேன் தெரியுமா?
பாண்டவர்களிடம் பரிவுகாட்டிப
பேசுகிறான் திருதராட்டிரன்
சித்திர பாரதம்
கதை செல்வேள்
படம் MN.ராஜா
பீஷ்மரும், விதுரரும் பாதி ராஜ்ஜியம் தந்து
தருமருக்குப் பட்டாபிசேகம் கட்டவேண்டும்
என்று வற்புறுத்த, தருமருக்குப்பட்டாபிசேகம்
நடத்துகிறான் திருதராட்டிரன்
பாண்டு புத்திரனே! என் பிரிய தருமா!
புரூரவன், நகுடன், யயாதி முதலான
நம்முன்னோர்கள் இருந்து ஆண்ட
காண்டவபிரத்தம் சென்று, நீ அங்கி
ருந்து உன் அரசாட்சியைச் செலுத்து.
அப்படியே ஆகட்டும்
தந்தையே!
ஒரு பேய்நகரமோ என்று அச்சுறும் வண்ணம்
பாழடைந்து அடர்ந்த வனமாகத் திகழ்கிறது
காண்டவப்பிரத்தம். பாண்டவர்கள் வருத்தம்
கொண்டு நிற்க அங்கு வரும் கண்ணபிரான்
"கவலை வேண்டாம்" என ஆறுதல் கூறுகிறார்
கண்ண பெருமான் நினைத்தவுடன் தேவேந்-
திரன் விசுவகர்மாவோடு வந்து தோன்றுகின்றான்
தேவரும், மனிதரும் அதிசயப் படத்தக்க
ஒரு அற்புத நகரத்தை உண்டாக்கு


அமராபதியும், அளகாபுரியும் பொலிவிழந்து போகும் வண்ணம நவமணிகளையும் பதித்து
இந்திரப்பிரத்தம்" எனும் நகரத்தை நொடியில் தன் மனத்தாசேயே படைத்து விடுகிறான் விசுவகர்மா.
நீதிநெறி தவறாமல் தருமர் செங்கோல் செலுத்தி வரும காலத்தில், ஒரு நாள் நாரதர் இந்திரப்பிரத்தம் வருகிறார்
ஓம். நமோ நாராயணா
வரவேண்டும் வர வேண்டும். தங்கள் வருகை எங்கள் பெருவகை
மங்களம் உண்டாகட்டும
"நான் ஒரு நீதி சொல்கிறேன் கேளுங்கள். சுந்தன், உபசுந்தன் எனும் இரு அரக்கர்கள் இருந்தார்கள். அவர்கள் மும்மூர்த்திகளிடமே சாகாவரம் வாங்கியவர்கள். ஒருநாள் தேவலோகத்துப் பேரழகி திலோத்தமையைக் கண்டார்கள்."
இவள் எனக்கே உரியவள்
இல்லை எனக்குத்தான் உரியவள்.
"பிறரால் சாகாவரம் பெற்ற அவர்கள் கதாயுதத்தால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு மாண்டு போனார்கள்"
ஆகவே பெண் ஆசை கொடியது. எத்தகைய தூயவரையும் கெடுத்து விடும். முற்பிறவி தவத்தால் திரௌபதியை மணம் புரிந்த நீங்கள் ஐவரும் ஆண்டுக்கொரு வராகத் திரௌபதியுடன் கூடி வாழுங்கள். திரௌபதி ஒருவரோடு வாழும் போது மற்ற நால்வரும் அவளைக் காணக் கூடாது. அப்படி காண நேர்ந்தால் கண்டவர் உடனே ஒரு வருட காலம் தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும்"
அப்படியே செய்கிறோம் சுவாமி."

# [27]

## திருமுருக கிருபானந்த வாரியார்

கயமுகன் என்ற அசுரன் அந்த வாசலில் காவல் புரிந்து கொண்டிருந்தான். அவன் ஆயிரம் யானை முகங்களைக் கொண்டவன். தன்னுடன் போர்செய்வதற்குப் பகைவர்கள்இல்லையே என்று ஏங்குபவன். அவன் ஆகாயத்தில் செல்லும் வீர வாகு தேவரைக்கண்டு ''சீறுகின்ற சிங்கம் இருக்கும் குகையில் மான் வருவதுண்டோ? உன்னை அனுப்பியவர் யார்? நீ வந்த காரணம் என்ன?'' என்று கோபத்துடன் கூச்சலிட்டான்.

கயமுகன் கூறியதைக்கேட்ட வீரவாகுதேவர் சிரித்துக்கொண்டே, ''அப்பனே உயிரை விடுவதற்கு உனக்கு இத்துணை அவசரம் ஏன்? வலுவில்




மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்திலுள்ள வீரவாகுதேவரின் சிற்பம்

என்னை அழைக்கின்றாயே வா, வா'' என்றார். வீரவாகுதேவர் போரை விரும்பாவிடினும், யுத்தம் புரிய அழைப்பு வந்தபின் அதனை மறுப்பது வீர லட்சணமாகாது எனபதால் கயமுகனுடன் போர் தொடங்கினார். கயமுகன் பறித்தெறிந்த மலைகளை எல்லாம் மாலை போல் மார்பில் ஏற்றுக் கொண்ட வீரவாகு தேவர் இறுதியில் கயமுகனுடைய மார்பில் ஒருகாலால் உதைத்ததுமே அவன் அலறி விழுந்து உயிர் இழந்தான்.

''கந்தவேளின் கட்டளையை விரைவில் நிறைவேற்றமுடியாமல் இப்படியே அசுரர்களுடன் போர் செய்து காலத்தைச் செலவிடும்படியாயிற்றே'' என்று வருந்திய வீரவாகு தேவர் சூரபன்மனிடம் நகரத்திற்குள் எளிதில் செல்ல வழி என்னவெனச் சிந்திக்கலானார். இந்த வடிவத்துடன் அசுரக் காவல்காரர்கள் கண்ணில்படாமல் செல்லமுடியாது என்று கருதிக் கந்தவேளைத் தியானித்து எவரும் காண்பதற்கு அரியதோர் அணுவுருவங்கொண்டு மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலில் உள்ள கோபுரத்தின் மேல் அமர்ந்தார். 'அணுவிலும் நுணுகியவன், பெரிதினும் பெரியவன்' என்று வேதம் ஆண்டவனை வருணிக்கிறது. முன்பு பெரிதினும் பெரியவனான பெருமான் வீரவாகுவுக்கு விசுவரூபம் தந்தான். இப்போது அணுவிலும் நுணுகிய அவனே அவருக்குச் சின்னஞ்சிறு உருவை அளித்தான்.

கோபுரத்தின் மீது அணு உருவில் அமர்ந்திருந்த வீரவாகுதேவர் வீரமகேந்திரத்தின் சிறப்புக்களைக் கண்டார். அங்கு நின்ற அளவற்ற சேனைகளைக் கண்டதும், வியாழ பகவான் கூறியதைக் காட்டிலும் அதிகச் சிறப்புடையது வீரமகேந்திர புரம் என்று எண்ணினார். ''இங்கே யானைகள் எத்தனை? தேவர்கள் எத்தனை? குதிரைகள் எத்தனை? காலாட்படைகளோ கடற்கரை மணல்களைக் காட்டிலும் அதிகம்.

சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள வளங்களையும் வனப்புகளையும் எப்படித்தான் நகரத்தில் வைத்தானோ? பானுகோபன் சொர்க்கத்தை எரித்தான் என்பதுபொய். சொர்க்கத்தைக் காட்டிலும் எவ்வளவோ அழகான இந்த மகேந்திரபுரியைக் கண்டு நாணமும், வெட்கமும் சுடத் தானே எரிந்து அழிந்தது போலும். இங்கே பௌதிகப் பெருமைகள் எல்லாவற்றையும் கண்டேன். ஆனால் இந்தப் பெருமை எவ்வளவு இருந்தும் என்ன? இங்கு அறம் இல்லை: வாய்மை இல்லை என்று எண்ணினார்.

வீரமகேந்திரபுரியில், நரம்புகள் மேல் எழுந்து சதைகள் வற்றி, நரைத்துத் தடியூன்றி, கிழப்பருவமுற்று நடுங்குவோர்களையும், இறந்து போகின்றவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் வறுமையால் வாடுகின்றவர்களையும் காணமுடியாது; இதற்குக் காரணம் தவவலிமையாகும் என்று நினைத்தார்.

நாடிமேலெழத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமுத் தசைந்திடு வோரையுங் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப்போரையும் மிடியால்
வாடுவோரையும் கண்டிலம் இதுதவ வலியே.

செந்தாமரை மலர்மீதமர்ந்து வண்டுகள் தேன்பருகுவது போல் வீரமகேந்திர புரியிலிருந்த பெண்கள் மாணிக்க மாளிகைகள் மீது அமர்ந்து கள்ளைப் பருகிக் கொண்டிருந்தனர். அந்த மாளிகைகளிலே வருணன் சிறந்த அரிசியைக் களைந்து கொடுக்க அவற்றை அக்கினித் தேவன் தன்னைத் தானே தீ முட்டிக்கொண்டு ஊன்களோடு கலந்து



பக்குவம் செய்து வைத்தான். அத்தகைய அற்புத உணவு வகைகளை அரக்கர் தம் மனைவியரோடு உண்டு மகிழ்ந்தனர்.

கொடுங்கோலாட்சியில். ஆளும் சக்தி படைத்தோருக்கு உற்றவர் யாவரும் அதிக சுகபோகம் பெற்று வாழ்வது வழக்கம். அசுரர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று காமதேனுவும் சிந்தாமணியும் வேண்டியவற்றைக் கொடுத்தன. வாயு தேவனே வீரமகேந்திரபுரியின் வீதிகளைப் பெருக்க வருணன் பன்னீர் தெளிக்கின்றான்.

வந்த காரியத்தை விட்டு இந்த நகரத்து வளங்களையே பார்த்துக் கொண்டு காலந்தாழ்த்துவது சரியல்ல என்று கருதிய வீரவாகுதேவர் சூரபன்மன் உறையுமிடத்தை அடையக்கருதி ஆகாய வழியாகத் தமது சூட்சும உருவுடன் சென்றார். ''சூரனைக் காணுமுன் என் பிள்ளையைக் கண்டு ஆறுதல் கூறுக' என்று அமரர்கோன் கேட்டுக் கொண்ட நினைவு அவருக்கு வந்தது. உள்ளத்தில் அன்பும். துயரமும், பரிவும் பெருக தேவரும் சயந்தனும் இந்தக் கேளிக்கை நகரில் எங்கு சிறைப்பட்டு அவலமாக அவதியுறுகின்றனரோ என்று கேட்கலானார். அசுரரின் தலைமை அமைச்சனாகிய தரும கோபனின் மாளிகைச் சிகரத்தில் தங்கி நகரைக் தம் பார்வையால் துழாவும்போது சயந்தனும் தேவர்களும் சிறையிருந்த இடத்தைக் கண்டுபிடித்தார்.

சிறையில் நூற்றெட்டு யுகங்கள் துன்பப்பட்டு நாளுக்கு நாள் கொடுமை பொறுக்க முடியாமல் தவித்த சயந்தன் யாரை நம்பியும் பயனில்லை என்று இறைவனொருவனையே கசிந்துருகி வேண்டினான்.

''தண்டேன் துளிக்கும் தருநிழற்கீழ்
வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன் பெருந்துயரம் வான்பதமும்
கோதென்றே
கண்டேன் பிறர் தம் பதத்தொலைவும்
கண்டனனால்
கொண்டேன் சிவனேநின் தொல்பதமே வேண்டு
வனே!

குளிர்ந்த தேன் துளிக்கின்ற கற்பக மர நிழலின் கீழ் வாழ்கின்ற பெரும் பதவியை விரும்பி அடியேன் இப்பெருந்துயரத்தைக் அடைந்தேன். தேவ பதவிகள் சாறுபோன சக்கையென்று உணர்ந்தேன். தேவ பதவிகள் அழிந்ததையும் பார்த்தேன். சிவ பெருமானே! அடியேன் உமது திருவடி ஒன்றையே இனி வேண்டுவேன்.

''அல்லல் பிறவி அலமலம் விண்ணா டுறைந்து
தொல்லை திருநுகரும் துன்பும் அலமலமால்
தில்லை திருநடஞ்செய் தேவே இனித்தமியேற்
கொல்லைத் துயர்தீர்த் துனதுபதந்தந்தருளே''

தில்லையில் திருநடனஞ் செய்கின்ற தேவதேவா! துன்பத்துக்கு உறைவிடமான பிறவிபோதும் போதும். தேவருலகத்தில் வாழ்ந்து உயர்ந்த செல்வத்தைக் துய்க்கின்ற துன்பமும் போதும், போதும். துணை இல்லாத அடியேனுடைய துயரைத் தீர்த்து விரைந்து ஆண்டு அருள்புரிவீர்.

ஒன்றாய் இருதிறமாய் ஓரைந்தாய் ஐயைந்தாய்
அன்றா தியின்மீட்டும் ஐந்தாய் அளப்பிலவாய்
நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாம் தீங்ககற்றி
நன்றா விகட்கு நலம்புரிதற் கேயன்றோ.

முருகர் சயந்தன் கனவில்தோன்றினார். ''கவலைப் படாதே! தேவர்கள் சிறைபட்டபின் உன் தந்தைதன் குறையையும் உங்கள் குறையையும் எம்மிடம் முறையிட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளின்படி நாம் எண்ணற்ற படை களுடன் புறப்பட்டுப் பூவுலகம் வந்தோம். கிரௌஞ்ச மலையையும், தாரகனையும் அழித்து விட்டுத் திருச்செந்தூரில் வீற்றிருக்கிறோம். நான் முகனும் நாராயணரும் உன் தந்தையும் மற்ற தேவர்களும் எம்முடன் இருக்கிறார்கள். உன்னு டைய தங்கை தேவயானை மேருகிரியில் வளர் கிறாள். நீ யாரைக் குறித்துமே வருந்தாதே! உன்னைக் குறித்தும் வருந்தாதே. சூரபன்மனிடம் வீரவாகு என்ற தூதுவரை அனுப்பியிருக்கிறோம். அவன் நீதிநெறிகளைச் சொல்லுவான். ஆனால் அவற்றையெல்லாம் சூரபன்மன் கேட்க மாட்டான் என்பதும் எமக்குத் தெரியும். நாம் நாளையே செந்திலம்பதியை விட்டு நீங்கி மகேந்திரபுரிக்கு வர நேரும். பிறகு போர் மூளும். தேவர்களுக் கெல்லாம் நலன் விளையும்'' என்று கூறியருளினார்.

சயந்தன் சிந்தை குளிர்ந்து கந்தனை மனம் உருகிப் போற்றினான்.

''சயந்தா! நாம் அனுப்பியுள்ள தூதன் உன்னையும தேவர்களையும் வந்து சந்தித்து ஆறுதல் கூறுவான்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தார் பன்னிருகைவேலவன். சயந்தனுக்கு ஆறுதல் கூறியதுபோலவே முருகப் பெருமான் மற்ற தேவர்களின் கனவிலும் தோன்றி ஆறுதல் கூறி மறைந்தார்.

கனவு நீங்கி நனவு வரப் பெற்றதும்தேவர்கள் ஒருவருக்கொருவர் தாம் கண்ட கனவுகளைச் சொல்லிக் கந்தவேளின் திருவருளை நினைந்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்திருந்தனர்.

முன்பு தேவர்கோன் சிறையிலிருக்கும் சயந்த னுக்கு ஆறுதல் கூறுமாறு வீரவாகு தேவரிடம் கூறியதுடன், இப்போது ஷண்முகப் பெருமானும் அதனையே சயந்தனுக்கு வாக்களித்துவிட்டதால், வீரவாகு சிறைச்சாலையை நெருங்கினார். மோகன மந்திரத்தால் காவலரை மயங்கச் செய்து சிறைச் சாலைக்குள் சென்றார்.

வீரவாகு தேவரைக் கண்ட சயந்தன் முன்ன மேயே கந்தக்கடவுளின் வாக்குறுதியை கேட்டி ருந்தான், ''இவரே அவரது தூதர்'' என்று ஊகித்துக் கொண்டான். வீரவாகு தேவர் கந்தப் பெருமானின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே சயந்தன் முன் சென்றார். அத்திருநாமம் சயந்தன் காதுகளின் வழியே உள்ளம் புகுந்தது.

''சிவகுமாரராகிய கந்தவேளுக்கு நான் தம்பியும் தூதனுமாவேன்'' என்று வீரவாகுதேவர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

''எங்கள் துன்பத்தை நீக்கத் தாங்கள் வந்து விட்டீர்கள். எங்கள் சிறை வாழ்வும் இப்போதே நீங்கியது போல உணர்கிறோம்'' என்று சயந்தனும் தேவர்களும் கூறினார்கள்.

தமது தூதுப் பணியைக் கூறிய வீரவாகு தேவர், ''சிவபெருமானே ஆறு திருமுகங்களுட னும், பன்னிரண்டு திருப்புயங்களுடனும், கந்த வேள், முருகவேள் என்ற திருப்பெயர்களுடனும் உங்கள் துன்பங்களைப் போக்க வருவார். உங்கள் சிறையையும், பிரமன் குறையையும் தீர்த்து உல கங்களையெல்லாம் இரட்சிக்கும் பொருட்டே சிவ பெருமான் கந்தவேளாக எழுந்தருளியிருக்கினறார் என்றார்.

''தன்னிகர் இன்றி மேலாய்த் தற்பர வொளியாய்
யாரும்
உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்கள்ஆறும்
பன்னிருபுயமுங்கொண்டு பாலகன் போன்றுகந்தன்
என்னுமோர் பெயரும் எய்தியாவருங் காண
வந்தான்''

'' பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமுங்
கொண்டே
எங்கள்தம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை
என்னில் செங்கண்மால் உந்தி பூத்தோன் சிறு
மையும் மகவான் துன்பும்
உங்கள்தம் சிறையும் நீக்கி உலகெலாம் அளிப்பக்
கண்டாய்'

வீரவாகு கூறியதையெல்லாம் கேட்டுச் சோர்வு நீங்கி உற்சாகம் கொண்ட தேவர்கள் ''பெருமையில் சிறந்த வீரதிலகமே! நீர் வெற்றி பெறுவீராக!'' எனறு அவரைத் தொழுது வாழ்த்தி னார்கள். வீரவாகுதேவர் சிறைக்கூடத்திலிருந்து புறப்பட்டார்.

—(தொடரும்)

---

# வையகத்தில் வாழும் வழி

பலருக்குத் தாம் ஏன்பிறந்தோம் என்பதும் எப்படி வாழ வேண்டும் என்பதும் தெரிய வில்லை. அவர்களுக்கு வழிகாட்டும் இந்தப் பாடல்.


வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டுங் கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டுந்
வளரறஞ் செய்ய வேண்டும் [தேடி

சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங்
தியாகங் கொடுக்க வேண்டும் [கொண்டு

ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும் நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்
நம்பன்இணை அடிபூசை பண்ணவேண்டும்
னாலுமிகு பத்தி வேண்டும் [பண்ணி

ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அனகளம தருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர 'கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

—அறப்பளீசுரசதகம்.



# சிற்பக் கலைச் சிறப்புமிக்க தாரமங்கலம்!


அருள்முருக சௌந்தரராஜன்
கல்பாக்கம்.


சேலத்திலிருந்து மேற்கே 24 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்தது தாரமங்கலம். இங்கே அமைந்ததோர் அழகான திருக்கோயில் கைலாசநாதர் ஆலயம் ஆகும்.

இவ்வாலயத்திலுள்ள கலை நுணுக்கம் மிக்க சிற்ப வேலைப்பாடுகளைக் கண்டு ரசிக்கவும் சுவைக்கவும் யாத்ரீகர்களும், ஆன்மீகவாதிகளும் அவசியம் ஓர்முறை விஜயம் செய்ய வேண்டும்.

சிவபெருமான் கயிலையில் வாழ்ந்தாலும், அவருக்கு உகந்த இடமாக தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது. அவர் தனது திருமணத்தை இந்தத் தமிழ் நாட்டில் நடத்திக் கொள்ள ஆசைப்பட்டிருக்கிறார். அப்படி அவர் விரும்பிய திருமணத்தை நடத்திக் கொடுத்தவர் ஸ்ரீமகாவிஷ்ணு. அவர் தன் தங்கையான பார்வதி தேவியை சிவபெருமானுக்கு தாரை வார்த்து திருமணம் செய்வித்த தலம் இது. ஆகையால் தாரை மங்கலமான இத்தலம் தாரமங்கலமாகி விட்டது.

தாராக்கணங்களாகிய நட்சத்திரங்கள் சிவபெருமானை பூஜை செய்த காரணத்தால் தாரமங்கலமானதாகவும் ஒரு சிலர் கூறுவார்கள்.

''வானுயர்ந்த கோபுரத்தை யானை தாங்கி
வல்ஈசன் பால்செல்லும் வாயில் சாட்சி!
தான்உருளும் கற்குண்டு யாளிவாயில்
தகவுபெற அமைந்திட்ட சிற்ப மாட்சி!
மான்மருளும் ரிசிப்பெண்ணின் அழகும்! அந்நாள்
மங்கையரின் அணிகலனும் மயக்கம் ஏற்றும்!
ஊன்உருகும் காதலுக்குச் சின்ன மாக
உருவான ரதிமன்மதன் கோலம் என்னே?
தாமரையைக் கிளிகொத்தும் சிற்பம்! உள்ளத்
தாமரையை அது கொத்தும் உயர்ந்த நுட்பம்
தாமனைத்து ஒளிக்கையால் ஆண்டு தோறும்
தலைவணங்கும் சூரியனும் மாசி என்றும்''

என்று ஓர் கவிஞர் அழகாக வர்ணித்து பாடியுள்ளார் இக்கோயிலைப்பற்றி.

தண்டகாருண்யமாகிய இப்பகுதியில் ஓர் சிற்றரசன் ஆண்டு வந்தான். அவனிடம் பெரிய ஆநிரை ஒன்று இருந்தது. அந்த ஆநிரையில் உள்ள பசுக்கள் எல்லாம் அங்குள்ள காடுகளில் சென்று மேய்ந்து வரும். அதில் உள்ள ஓர் பசு மட்டும் தனியே சென்று தன்னிடமுள்ள பாலை ஓர் புதரில் சொரிவதைக் கண்ட மாட்டுக்கார சிறுவன் மன்னனிடம் சென்று கூற மன்னன், அந்த இடத்தில் இருந்த புதரை வெட்ட உள்ளே சுயம்புலிங்கமாக இறைவன் இருப்பதைக் கண்டு அவரையே கைலாசநாதராக பிரதிட்டை செய்து கோயில் கட்டினான். இது நடந்தது 13-ஆம் நூற்றாண்டு ஆகும். இவ்வரலாற்றை மெய்ப்பிப்பதுபோல இவ்வூருக்கு அருகில் மாட்டையாம்பட்டி, இளங்கன்றுசாலை என்று இரண்டு சிற்றூர்கள் இன்றும் உள்ளன.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று ஹொய்கால மன்னனான ராமநாதராஜா 1286-இல் இக்கோயில் கட்ட முனைந்தான் என்று கூறுகிறது. கோபுரம், சிற்ப வடிவங்களை எல்லாம் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கெட்டி முதலியார் அமைத்தனர் என்பது வரலாறு.

ஆலயத்தின் உள்ளே செல்ல நம்மை வரவேற்பது உயரமான வேங்கை மரத்திலான இரண்டு கதவுகள், இவை ஒவ்வொன்றிலும், இரும்பால் செய்யப்பட்ட 60 குமிழ்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உள்ளன.









மேலே நிமிர்ந்து பார்க்கிறோம். தமிழ் வேந்தர்களின் சின்னமான புலி, மீன், வில் மற்றும் இவ்வாலயத்தை நிர்மாணித்த கெட்டி முதலியின் ''வாடாமாலை வண்ணத்தடுக்கும்' காணலாம்.

கீழே அழகிய செந்நிற பவளக்கல் உள்ளது. எவ்வளவு கடின வெப்பத்தையும் குளிர்ச்சியாக்கி நம்மைத் தாலாட்ட வல்லது.

கோபுரத்தைத் தாண்டி உள்ளே வரும்போது இருபுறமும் இரண்டு யானைகளைக் காண்கிறோம். நம்மையும் மீறித் திரும்பி அந்த கோபுரத்தை பார்க்கிறோம். ஆஹா அற்புதமான காட்சி, அந்த இராஜ கோபுரத்தை இரதமாக இரண்டு யானைகளும் இழுத்து வருவதைக் காணலாம்.

இப்போது வெளிப்பிரகாரத்தில் வந்து நிற்கிறோம். இங்கே மூன்று விநாயகர்கள் சந்நிதிகள். இதனை கெட்டி முதலி, முடிகெட்டி முதலி, மும்முடிகெட்டி முதலி ஆகிய மூவரும் தனித்தனியாகப் பிரதிட்டை செய்து மகிழ்ந்துள்ளார்கள்.

இப்பிரகாரத்தில் முருகப்பெருமான்வேலொடு நிற்கும் கோலத்தையும் காணலாம்.

அடுத்து நம் கண்ணில் படுவது அழகுமிகு வேலைப்பாடுகள் நிறைந்த இரண்டு யாளி தூண்களும் நான்கு குதிரை வீரர்கள் உள்ள தூண்களும் ஆகும். இந்த யாளி வாயில் நான்கு அங்குலம் உள்ள கல்பந்து உள்ளது. அதனை வெளியே எடுக்க இயலாது. கீழே சற்று தள்ளிப் பார்த்தால் ஒரு சின்ன யாளி, அதன் காதில் ஓர் குச்சியை விட்டால் கீழாக வருகிறது. ஒரு சிறு எறும்பு உள்ளே நுழைந்து வெளியே வருவதைக் காணலாம்.

அடுத்து ஒரு சிறுத்தை பாய்கிறது. குதிரை வீரன் வெளியே வருவதைக் காணலாம். இதோ இருவீரர்கள் கத்தியால் சிறுத்தையைக் குத்துகிறார்கள். கத்தி சிறுத்தையின் உடலில் புகுந்து வெளியே வந்துள்ள நுட்பத்தையும் காணலாம். இந்த குதிரை வீரனை தூர இருந்து பார்த்தால் ஒரு உருவம் மட்டுமே தெரியும். அருகில் சென்று பார்த்தால் இரண்டு உருவங்கள் தெரியும்.

இந்த பக்கம் மேலே ஓர் இரும்பு சங்கிலி தொங்குகிறது. அருகில் நின்ற அன்பர் அதுஇரும்பு அல்ல. கற்சங்கிலி என்கிறார். அது உண்மைதான்.

ஸ்ரீ ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராகக் கோலமயில் மீது வீற்றிருக்கும்காட்சி கண்கொள்ளாக்காட்சி. ஸ்ரீ அருணகிரிநாதர் இக் கோயிலுக்கு விஜயம் செய்யவில்லை போலும். இதுவரை வந்த திருப்புகழில் ஒரு பாடல்கூட இத்தலத்தை பற்றி இல்லாதது பெரும் குறை.

சிவபெருமானது சந்நிதிக்கு வலதுபுறம் இரண்டாவது தூணில் வாலி, சுக்ரீவன் தன்னை மறந்தநிலையிலுள்ள போர்க் காட்சி. ஒரு தூண் விட்டு மறு தூணில் இராமபிரான் அம்பு தொடுத்துக் கொண்டு இருக்கின்ற காட்சி. இராமபிரான் அம்பு நுனி வழியே நோக்கிடில் வாலியின் மார்பு தெரியும். வாலியிடமிருந்து பார்த்தால் இராமபிரான் உருவம் தெரிவதில்லை. மறைந்திருந்து இராமன் வாலியை கொன்ற தத்துவத்தில் இச் சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கும் நுட்பம் அதி அற்புதம்.

மகா மண்டபத்தின் நடுவே நின்று மேலே பார்க்கிறோம். எட்டு சங்கிலித் தொடர்கள். நடுவே உள்ள நான்கு சங்கிலி, மூன்று அடுக்குத் தாமரை, எட்டு கிளிகள் யாவும் ஒரே கல். பெரிய பாறையை வெட்டி எடுத்துச் செதுக்கியுள்ளமை, சிற்பிகளின் அதிஅற்புதமான கை வண்ணம் ஆகும். தாமரை இதழை எட்டு கிளிகளும் கொத்திக் கொண்டுள்ளது. ஒரு இதழில் வால், ஒரு இதழில் கால், ஒரு இதழில் மூக்கு, நடுவே உள்ள கல் வளையம் சுழலுகிறது. இதைச் சுற்றி அட்டதிக்கு பாலகர்கள், தங்கள் பத்தினிகளுடன் இருக்கிறார்கள்.

இடதுபுறம் உள்ள யாளியையும் பார்க்கிறோம். அதன் வாயிலும் மூன்று கல் உருண்டைகள் உருளுகின்றன.

மற்றுமொரு நிகழ்ச்சி : பற்பல தலங்களில் சூரியன் தன் ஒளிக்கிரணங்களைக் காலையில்தான் சிவபெருமான் மீது வீசுவார். ஆனால் இங்கோ ஆண்டுதோறும், மாசி மாதம் 9, 10, 11 தேதிகளில் மாலை 6 மணியளவில் பல தடைகளைக் கடந்து சூரிய ஒளி கர்ப்பகிரகத்தினிலுள்ள நந்தியின் மீது பட்டு பின்னர் அதன் இரண்டுகொம்புகளின் வழியான சிவபெருமான் மீது விழுவதைக் கண்டு சேவிக்கலாம்.

— — — —



# நால்வர் கண்ட நாயகன் நடனம்

'கம்பன் கவிநயமணி'
வே. தியாகராஜன்

## சுந்தரர் கண்ட சுந்தர நடனம்

தில்லை நாயகனான நடராஜப் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்த அடியார்களின் ஆனந்த அனுபவத்தை நாம் அறிந்து மகிழ்வது ஒரு பெரும் பேறாகும். திருத்தொண்டத் தொகைபாடி, அருளாளர்களாகிய அறுபத்து மூவரை உலகிற்கு அறியுமாறு செய்த சான்றோரான சுந்தர மூர்த்தி நாயனாரின் மகிழ்ச்சி நிறைந்த அனுபவத்தை நாமும் அறிந்து மகிழ்வோம்.

மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிய ஜம்புலன்களில் கண்கள் இறைவனின் நடனக் காட்சி கண்டதும் அப்படியே குத்திட்டு நின்றன. வாய் பேச மறுத்தது. உடல் தன்னை மறந்து விட்டது. மூக்கு மூச்சு விடும் தன்மைகூட வெளியில் காண முடியவில்லை. செவிகள் எந்த ஒலியையும் கேட்க மறுத்தன. மற்ற புலன்கள் வேலை செய்யவில்லையோ எனும்படி கண்கள் மட்டும் அவ்வழகிய காட்சியைக் கண்டு கொண்டேயிருந்தன. இந்நிலையை 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' என்றார்.

சித்தம ஒரு பொருளை என்னவென்று ஆராயும். புத்தி அப்பொருள் நேர்மையானதா இல்லையா எனச் சோதிக்கும். மனம் அப்பொருள் நமக்குத் தேவையா எனச் சிந்திக்கும். அகங்காரம் தேவை தேவையில்லை எனத் தீர்மானமானதும் செயல் படும். இறைவனைத் தரிசித்த நாயனாரின் சிந்தை (சித்தம்) மட்டும் வேலை செய்தது. 'அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக' என்றார்.

எல்லாக் குணங்களையும் அடக்கிச் சத்துவ குணம் மேலிட்டது. ஏனைய ராஜச தாமச குணங்கள் அடங்கின. இதனைக் குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக என்றார். இடையறாது தொடர்ந்து ஆடும் இக்கூத்தை எல்லையில்லாக்கூத்து என்றும் கண்டோரைக் களிக்கச் செய்வதால் ஆனந்தக்கூத்து என்றும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து காரியங்களையும் செய்ய ஒற்றைக் காலில் நின்றாடுவதால் தனிப் பெருங் கூத்து என்றும் குறித்தார் சேக்கிழார் பெருமான்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளபபரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாக குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இந்துவார் சடையான் ஆடும்
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.


இறைவனது திருமுடியிலுள்ள பிறைச்சந்திரன் ஒரு கலங்கரை விளக்கத்திலுள்ள விளக்கொளி போல் அவனிருக்குமிடத்தைக் காட்டியது. நடுக் கடலில் தவிக்கும் ஒருவனுக்குக் கரையைக் காட்டுவதுபோல பிறவிக்கடலிலிருந்து காக்கும் தெய்வம் தன்னை அழைத்துக் காத்த மாதிரி களிப்படைந்து ''பெருமானே! இப்பிறவியே எனக்கு மிகச் சிறந்தது எனக்குச் சிறந்தது'' என எண்ணி உருகிறார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலானந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

உலகும் நன்கு பொலிந்து வாழ, வேதமான சிலம்புஆரவாரம் செய்ய, பிரம விட்டுணுக்களுக்குத் தேடிக் கிடைக்காத பெருமான் சிதாகாசம் என்னும் சிதம்பரத்தில் ஆடும் காட்சி கண்டு அன்புருவாகி கைகள் முந்திக் குவிந்து வணங்கினவா, கண்கள் தான் முந்தித் தரிசித்தனவா, மனம் முதலான அந்தக் கரணங்கள் வேலை செய்தனவா என்பது அறிய முடியாத நிலையில் பஞ்சாட்சரப்படிகளின் அருகில் தாழ்ந்து வணங்கினார்.

வையகம் பொலிய மறைச்சிலம்பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர் தாம் வெளியே ஆடுகின்றாரை
அஞ்சலி மலர்த்திமுன் போற்றும்
கைகளோ! திளைத்த கண்களோ? அந்தக்
கரணமோ? கலந்த அன்புந்தச்
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்
தெழுந்தான் திருக்களிற்றுப்படி மருங்கு.

இந்தப் பெரியாரின் அனுபவம் ''பிறருக்கு அடிமையாகாமல், கையில் டமருகமும், தீயும், பாம்பையும் வைத்துக் கொண்டு ஆடும் நடராஜப் பெருமானுக்கு ஆளாகி விட்டோம். உயிர்களைச் செக்கிலிட்டு ஆட்டிக் கொடிய தண்டனையளிக்கும் யம வாதனை நமக்குக் கிடையாது'' என்ற



கருத்துடைய கீழ்க்கண்ட பாடலாக அவரது வாக்கிலிருந்து வந்தது.

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ
வாழு நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும்போது
தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரி அகலும்
கரிய பாம்பும்
பிடித்தாடிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானை
பெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்

## (ஆ) நாவுக்கரசர் கண்ட நடராசர்

நாவுக்கரசர் தில்லையில் எம் பெருமான் எதிரில் சென்ற உடனேயே அவரையறியாமல்அவர் கைகள் குவிந்து சிரமேற் சென்றன. கண்கள் தாமாகவே கண்ணீர் பொழிந்தன. மனம், புத்தி, சித்தம் அகங்காரம் யாவும் உருகின. வணங்குவதற்காக உடல் கீழே விழுந்தது. மீண்டும் வணங்குவதற்காக எழுந்தது. திருவடிதொழுவதற்கு அளவில்லா ஆர்வம் பெருகியது என்கிறார் சேக்கிழார்.

கையும் தலைமிசை பொலி அஞ்சலியன:
கண்ணும் பொழி மழை பொழியாதே
பெய்யுந்தகையன: கரணங்களும்
உடன் உருகும் பரிவின: பேரெய்தும்
மெய்யும் தரைமிசை விழமுன்பு!
எழுதரும் மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திரு நடம் எதிர்கும்பிடுப்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

''எம்பெருமானே! பத்தி செய்து பாட அறியாதவன் நான் உன் ஆடல் காண வந்தேன்'' எனப் பாடி உருகிறார். பேரின்பம் நல்கும் தில்லை நாயகனின் திருநடனத்தைக் காண இறைவன் மீண்டும் மனிதப் பிறவியை அளிக்க வேண்டும். ''இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே-மனித பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்று உருகினார். தில்லைநாயகன் திருவடியைக் கண்டகண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே எனக் காட்சியின் பெருமையையும் இன்பத்தையும் கூறினார். ''நினைத்துப் பாருங்கள், உங்களுக்கு எந்தக் குறையும நேராது. ஒரு சிறு குழந்தையான மார்க்கண்டனுக்காக யமனை எட்டி உதைத்த பெருமான் தில்லையில் ஆடுகின்றான்! அப்பெருமானது அபயக்கரம் என்று வந்தாய் எனக் கேட்கும் குறிப்பேயாகும்.

ஒன்றியிருந்து நினைமின்கள்! உந்தமக்கு
ஊனமில்லை!
கன்றிய காலனைக் காலால் கடிநதான்
அடியவற்கா!
சென்று தொழுமின்கள் தில்லையும் சிற்றம்பலத்து
நட்டம்
என்று வந்தாய்? என்னும் எம்பெருமான் தன்
திருக்குறிப்பே!

என அபயகரத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

வேழமுரித்த இறைவன், தன்னை நினைப்பவர் நெஞ்சில் கோயில் கொள்பவன். அத்தகைய பெரியோனைத் தினைப்பொழுதும் மறந்து வாழ மாட்டேன் எனகிறார்.

பனைக்கை மும்மத வேழமுரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்

அனைத்து வேடமாம் அம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ''

பிரமன் அன்னமாக மாறி இறைவனது திருமுடியையும், திருமால் பன்றியுருக் கொண்டு திருவடியையும் தேடியும் காண முடியவில்லை. மார்க்கண்டனைக் காப்பதற்காக இறைவன் யமனை எட்டி உதைத்தார். அப்போது காலனான யமன் இறைவனது திருவடியைக் காணும் பேறு பெற்றான் என யமனுக்கு இறைவன் திருவடி தரிசனம் அருளியதாக அழகியதொரு புதுக் கருத்தைக் கூறினார்.

''மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று:
கீழிடந்து
மாலுமறிந்திலன் மாலுற்றதே வழிபாடு செய்யும்
பாலன்மிசைச் சென்று பாசம் விசிறி மறிந்த
சிந்தைக்
காலனறிந்தான் அறிதற்கரியான் கழலடியே.''

இத்தகைய பெருமானின் பெருமையைப பேசாத நாளெல்லாம் பிறவா நாளே எனப் பாடியுருகுகிறார்.

மதுரையில் வந்திக்குக் கூலியாளாய் இறைவன் தோன்றிய காலத்துப் பாண்டியன் பொற்பிரம்பு கொண்டு இறைவனை அடிக்க அவர்மறைந்தார். வந்தவர் அருள் மூர்த்தியான சிவபெருமானே என அறிந்த அரிமர்த்தன பாண்டியன் ''பிரமனும் திருமாலும் திருமுடியையும் திருவடியையும் தேடிச் சென்று காணக் கிடைக்காமல் வருந்தினரே! கூலியாளாக என் எதிரிலே தோன்றி எனக்கு அடிமுடி காட்டிக் கருணை செய்தாரே! பிரமனும் திருமாலும் இங்கு ஒரு கூலியாளாக வந்திருந்தால் இறைவனது முழுத்திருமேனியையும் தரிசித்திருக்கலாமே!'' என உருகினான்.

''மண் சுமக்கும் மள்ளராய் வந்திலரே! வந்தக்கால் பண் சுமக்கும் சொல்லிபங்கன் பாதமுடி காண் பாரே'' என அழகிய கருத்தொன்றைக் கூறுகிறார். பரஞ்சோதி மாமுனிவர் தம் திருவிளையாடலிலே.

கோயிற்புராணமென அழைக்கப் பெறும் சிதம்பரம் தல புராணத்திலே அவ்வாசிரியர் ''கவலையுறும் மனமே! நீ பிரமனுமில்லை! திருமாலுமில்லை! சிற்றம்பலவனான நடராஜப்பெருமானும் திருவண்ணாமலையிற் காட்சி கொடுத்த மாதிரி தீயுருவம் காட்டவில்லை. நீ மிகவும் நற்பேறு பெற்றுள்ளாய்! சிவகாமவல்லியம்மையுடன் சிதம்பரத்தில் நடனம் செய்யும் எம்பெருமானை தரிசித்தால் அடி முடி இரண்டும் காணலாமே!''

காதரமார் தருமனமே! கமலமலர் அயனல்லை!
சீதரமாயனுமல்லை; சிவனும் அனல் திரளல்லன்!
நீ தரமாய் அருளுடையை! நிலை கலங்கேல்.
இனிமன்றில்
ஆதரமாதுடனாடும் அண்டநடம் கண்டனையால்.

தேவர்களுக்கும் கிடைக்காத பேறு சிதம்பரம் நடராஜப் பெருமானைத் தரிசிப்பவருக்கும் கிடைக்கிறது என்பது குறிப்பு.

மறந்துகூடப் பூவுலகில் பிறக்கக் கூடாது என்பவர்கள்கூட நடராஜர் தரிசனம் செய்வதற்காகப் பிறவியை விரும்பி வேண்டுவர் என்ற அப்பர் பெருமான் கூறுவதைக் கோயிற் புராணமும் உறுதி செய்கிறது.

### மகாதேவன் இவர்தான்

தன் மட்டி விரவாது சீவனஞ் செய்பவன்
சர்மர்த்திய முளபுருட னாஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தருமதேவ னாம்
பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி விந்தரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்றும்
புண்யவா னேபிரம னாம்
நன்மைதரு பதினா யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்பவன் செங்கண் மால்
நாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவ னாம்
அன்மட்டு வார்குழலி பாகனே! ஏகனே
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே

—அறப்பளீசுர சதகம்

### (இ) ஞானசம்பந்தர் கண்ட ஞானக் காட்சி

இறைவன் தனக்களித்த ஞானத்தையே அம்பலமாகக் கண்டு களித்தார் ஞானசம்பந்தர். ஞானசக்தி கொண்டு மாத்திரம் அறியத்தக்க பரம்பொருள் தனது பெருங்கருணையால் கண்முதலான ஐம்புலன்களாலும் அறியத்தக்கதன்மையில் காட்சியளித்த தன்மை கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டுப் பாடினார்.

உணர்வின் நேர் பெற வருஞ்சிவபோகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும்
எளிவர அருளினை எனப் போற்றி
இணையில் வண்பெருங்கருணை
ஏத்திமுன் எடுத்த சொற்பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி.

''வேதங்களைக் கற்று, வேள்வித் தீ வளர்த்து கலியுகத்தின் கொடுமைகளை வென்ற தில்லை மூவாயிரவரும் வாழும் தில்லையூரின் பெரியோனான சிவபெருமானின் பாதங்களைப் போற்றி வணங்குபவரைப் பாவங்கள் பற்றாது'' என்ற கருத்துள்ள

''கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே''

என்ற திருப்பதிகம் பாடியருளினார். ''நறுமணம் கமழும் நெய்யும் பாலும் தயிரும கொண்டு ஆட்டப் பெற்றவனே! தில்லை வாழந்தணர் பிரியாது வணங்கும் சிற்றம்பலத்தில் கூத்தாடுவோனே! எம் தொல்வினைகளை அழித்தருள்க'' என்று பாடினார். சிதம்பரத்திலுள்ள மூவாயிரவர் சம்பந்தப் பெருமானுக்கு சிவகணங்களாகக் காட்சி தந்தனர். இக்காட்சியை

நிலத்தார் கரிய மிடற்றார்: நல்ல
நெற்றிமேல் உற்ற கண்ணினார்: பற்று
சூலத்தார்: சுடலைப்பொடி நீறணிவார்:
சடையார்
சீலத்தார் தொழுதேத்துச் சிற்றம்பலம்
சேர்தலால் கழற் சேவடி கைதொழுங்
கோலத்தார் அருளால் உள
காரணம் கூறுதுமே.''

எனப் போற்றிப் பாடினார்.

திருச்சிற்றம்பலம

## (ஈ) மணிவாசகர் கண்ட மாபெரும் நடனம்

மணிவாசகப் பெருமானுக்கு தில்லையே சிவலோகமாகக் காட்சியளித்தது. இறைவனின்காட்சி கிடைத்து ''கண்டபத்து'' பாடினார். தன் ஆனந்தத்தை ''அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே'' எனத் தான் சிவப்பேறு பெற்ற தன்மையை குலாப்பத்திலும் கூறினார். கோயில் திருப்பதிகத்தில் திருப்பெருந்துறை சிவனே என விளிக்கின்றார். தனக்கு குருமூர்த்தியான தட்சிணா மூர்த்தியின் திருக்கோலம் காட்டியருளிய திருப்பெருந்துறையை தில்லையிலே நினைத்துப் பாடினார் என்பர். பூ என்பது பொதுவாக தாமரையையே குறிக்கும் என்பதுபோல கோயில் என்பது நம்மவருக்குத் தில்லையையே குறிக்கும் என்பதால் சிலர் திருப்பெருந்துறையை நினைந்து தில்லையில் பாடினார் என்பர்.

இன்றெனக்கருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போனறு
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே

ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்றில்லை
யாருனை அறிய கிற்பாரே.''

என்ற திருவாசகத்தின்இதயம் போன்ற இப்பாடல் கோயில் திருப்பதிகத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

''இறைவனே! உன்னையே எனக்கு அளித்து விட்டாய். என்னை உன்னுடையதாகக் கொண்டாய். இதனால் உனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. எனக்கு அளவிலா ஆனந்தம் கிட்டியுள்ளது. இதில் யார் கெட்டிக்காரர்' என்ற கருத்துள்ள அழகிய பாடல் நினைப்பவர் நெஞ்சில் கோயில் கொள்ளும் கருணையைக் காட்டும் பாடல் இதில் காணப்படுகிறது.

''தந்ததுஉன் தன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன்றில்லா ஆனந்தம்பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்?
சிந்தையில் கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்!
யானிதற்கிலன் ஒரு கைம்மாறே!''

இது இறைவனின் கைம்மாறு கருதாத கருணையைப் போற்றிப் பாடிய பெருமையான கவிதை.

கோயில் திருப்பதிகம் பாடுதற்கு முன்னமேயே பாடப்பட்ட ஒரு பதிகத்தை முன்முறைமைகுறித்து ''மூத்த'' என்ற அடைமொழி கொடுத்து கோயில் மூத்த திருப்பதிகம் என்ற பாடல்களை பாடியருளினார். அதில் ஒரு பாடல் மிகமிகமிக அழகியது.

சிவபெருமானது ஐந்தெழுத்து மந்திரமான பஞ்சாட்சரத்தை ஐந்து வகையாகக் கூறுவர்.
(1) நமசிவாய என்பது ஸ்தூலபஞ்சாட்சரம்
(2) சிவயசிவ என்பது காரணபஞ்சாட்சரம்
(3) சிவாய நம என்பது சூட்சும பஞ்சாட்சரம்
(4) சிவ என்பது மகா காரணபஞ்சாட்சரம்:
(5) சி என்பது நாயோட்டும் மந்திரம் என விளக்கியருளினார் எனது ஆசிரியப்பிரானான உயர்திரு. முரு. பழ. ரத்தினம் செட்டியாரவர்கள். அதற்குத் திருமூலரின்

நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்தசோதி
நாயோட்டு மந்திரம் நாமறியோமன்றே.

என்ற திருப்பாடலையும் மேற்கோள் காட்டி அருளினார்கள்.

ஐந்தெழுத்தில் சி என்பது சிவன் வ என்பது சக்தி. ய என்பது ஆன்மா. ந எனபது திரோதனம். ம என்பது ஆணவம்.

''சிவய சிவ என்ற காரண பஞ்சாட்சரத்தில் ய என்ற ஆன்மாவை நீக்கி விட்டால் சிவசிவ என்பதில் இருபக்கங்களிலும் சி என்ற சிவனாகிய நீயிருக்க, நடுவில் வ என்ற அம்மை உள்ளாள். இதையே'உடையாள் உன்றன் நடுவிருக்கும்'. அதே நாமாவளியில் வ என்ற அம்மை இருக்க சி என்ற சிவனாகிய நீ நடுவில் உள்ளாய். இதையே 'உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்றார். சிவயசிவ என்ற காரண பஞ்சாட்சரத்தில் இரு பக்கங்களிலும் சிவ என்றஎழுத்துக்களில்அப்பனான நீயும் அம்மையான சக்தியும் இரண்டு பககங்களிலும் இருக்கின்றீர்கள். 'ய' என்ற ஆன்மாவான அடியேன் நடுவில் உள்ளேன். அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் உங்கள் இருவர் துணைகொண்டும் அடியேன் உள்ளேன். எனவே அடியேன் உமது அடியார்களின் நடுவுள் இருக்குமாறு அருள்புரிய வேணும்'' என உட்பொருள் வைத்துப் பாடியுள்ளார் என்பர். 'ய' என்ற ஆன்மாவை சிவனும் சக்தியும் சிவ என்ற இரண்டு எழுத்துக்களாக இருந்து காப்பதாகப் பொருள் பொதிந்துள்ளதால் சிவய சிவ என்ற காரணபஞ்சாட்சரத்தை இருதலை மாணிக்கம் என அழைப்பர் பெரியோர். இந்தப் பாடலை திருவாசகத்தின் இருதயமான பாடல் என்பர்.

இவ்வழகிய பாடல் முறையே சிவம் சகதியை தன்னுள் அடக்கி நிற்கும் தன்மையையும், சக்தியுள் தான் அடங்கி நின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆற்றும் அருள் நிலையையும், இருவரும் அடியார்களின் உள்ளத்திலுள்ள அனுபவ நிலையும் விளங்கும்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்தாடும்
முடியா முதலே! என் கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே.

திருவாசகப் பாடல்களை மாணிக்க வாசகப் பெருமான் பாடப் பாடத் தில்லை நாயகனான நடராஜமூர்த்தி தன் கையாலேயே எழுதினார் என்பது வரலாறு. ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என இறைவன் கூற, மாணிக்க வாசகர் திருக்கோவையார் என்ற நூலையும் பாட, அப்பாடல்களையும் தன் திருக்கரத்தினால் எழுதி, ''அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து'' என்று தன் கையொப்பமிட்டு, பஞ்சாட்சரப்படியில் வைத்து மறைந்தனர் என்பர்.

தில்லை வாழந்தணர்களும் மற்ற அடியார்களும், மாணிக்கவாசகரிடம் திருவாசகத்திற்குப் பொருள் கூறுமாறு வேண்ட, மாணிக்கவாசகர் தில்லைநாயகனான நடராசப் பெருமானின் திருவுருவையே பொருளாகக் காட்டி பஞ்சாட்சரப்படியேறி எம்பெருமானது அருட்சோதியில் கலந்தனர் என்பர்.

திருக்கோவையாரை மேலாகப் பார்க்கும் போது அது ஒரு சிருங்கார நூலோ எனத்தோன்றும். ஆனால் தலைவன் தலைவியைக் கண்ணுற்றது எனபது குருவின் திருமேனி காண்பதையும், தலைவியின் உள்ளத்தைத் தலைவன் அறிந்தது என்பது தன்னிடத்தில் இறைவனுக்கு அருள் உண்டு என ஜீவன் அறிந்ததையும், தலைவன் இன்பத்தின் இயல்பைக் கூறியது இறைவனிடம் பெற்ற இன்பத்தை வியந்தது என்றும், தலைவியின் இனிமையான சொற்கேட்கத் தலைவன் விரும்பியதை குருமொழி கேட்க விரும்பிய நிலையையும், காதல் தோழியை அவளது தோழி காட்ட அறிந்தது திருவருளைக் கண்டது என்றும், தலைவன் தந்த தழையை தலைவி விருப்புடன் ஏற்றாள் எனத் தோழி தலைவனுக்கு அறிவித்ததைக் கூறியது என்பது தலைவனின் பணி சிவபெருமானுக்கு உவப்பு என உயிருக்குத் திருவருள் உணர்த்திய தன்மை எனவும் உட்பொருள் கூறுவர்.

ஆரணம் காண் என்பர் அந்தணர்: யோகியர்
ஆகமத்தின்
காரணம் காண் என்பர்: காமுகர் காம நன்னூல்
என்பர்
ஏரணம் காண் என்பர் எழுத்து என்பர்
இன்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச்
செப்பிடினே.

அழகிய தமிழ்ச் சங்கம் என்னும் குளத்தில் தோன்றி, ஞான ஒளியுடையதாக, நானூறு இதழ்களான பாடல்களை உடையதாக, புலவர் பெருமக்களான வண்டுகள் தேனை உண்பது மாதிரி, பொருளை நுகர, சிதம்பரத்தில் ஆனந்த நிருத்தமாடும் நடராசப் பெருமானின் கருணையெனும் சூரியனின் கதிராய் மலர்ந்தது திருக்கோவையார் என்னும் தாமரை. இதனைத் திருச்சிற்றம்பலவனான நடராசப் பெருமானின் திருவடியில் சாத்தினார் மாணிக்கவாசகர். இந்நூலின் முதற் பாடலே திருவளர் தாமரை எனத் தொடங்குவதால் தாமரை தோன்றியது எனக் குறிக்கப் பெற்றது.

இதில் வரும் ஒவ்வொரு பாடலும் தமிழின் பெருமையையும் இறைவன் திருவருளையும் விளக்கும். தலைவன் தலைவியைப் பிரிந்த வருத்தத்தில் உள்ளான். தலைவனின் தோழன் தலைவனைப் பார்த்து 'பெண்ணாசையால் உடல் வாட விட்டனையா?'' எனக் கேட்கவில்லை ''தலைவ! இறைவனான நடராசப்பெருமான் தில்லையம்பலத்திலும் எளியவனான என் உள்ளத்திலும் மதுரையம்பதியிலும் உள்ளான். அப்பெருமான் மனமகிழ்ந்து ஆராய்ந்த தமிழின் இன்பத்தை நுகர்ந்ததாலோ, இசைத்தமிழ் கேட்டு உருகியதாலோ உன்தோள்கள் இளைத்து விட்டனவோ?'' எனக் கேட்டதாகப் பாடியருளினார்.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என்
சிந்தையுள்ளும்
உறைவான் மதிற்கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச்
சூழலபுக்கோ
இறைவா! தடவரைத் தோட்கு என்கொலாம்
புகுந்து எய்தியதே.

0 0 0 0 0

பெண்ணொருத்தி ஒரு ஆடவனைக் கண்டு ஆசை கொண்டாள். அவளை அவளது பெற்றோர் வேறொரு ஆடவனுக்கு மணமுடிக்க எண்ணினர். தனது கற்பினுக்கு இழுக்கு ஏற்படக் கூடாதென்று தான் கணவனாக வரித்த ஆடவனுடன் அப்பெண் சென்று விட்டாள். பெண்ணை வளர்த்த செவிலித் தாய் அந்தப் பெண்ணையும் அவளது காதலனையும் தேடிச் சென்றபோது எதிரில் கணவன் மனைவியராக வந்த ஒரு தம்பதிகளைக் கண்டு ''என் மகள் தான் தன் கணவனோடு திரும்பி வருகிறாள்'' என எண்ணினாள். ''உங்களைப்போல் ஒரு தலைவனையும் தலைவியையும் எதிரில் கண்டீரோ?'' எனக் கேட்க ''என்னை ஆட்கொண்ட தில்லை நடராசப் பெருமானைப் போன்ற ஒருவனைக் கண்டேன்.'' எனக் கூறித் தன் மனைவியை நோக்கி ''பெண்ணே பாக்கியை நீ கூறு'' என்றான்.

மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை;
இம்மேதகவே
பூண்டார் இருவர் முன் போயினரே! புலியூர் எனை
நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக் கண்டேன்:
அயலே
தூண்டா விளைக்கனையாய்! என்னையோ
அன்னை சொல்லியதே.

பாக்கியை நீ கூறு என்றதால் எதிரில் வந்த அப் பெண்ணைப பற்றி நீ கூறு எனத் தன் மனைவியிடம் கூறிய அத்தலைவன் பிறர்மனை நோக்காப் பேராண்மைக்குச் சான்றாக நின்றான் எனக் குறித்தார். இவ்வாறு தமிழின் பெருமையையும், தில்லைப் பெருமானின் மீது நமக்கு பக்தியை ஏற்படுத்துவதுடன் ஒழுக்கத்தையும் அறிவுறுத்துகின்றது. சான்றாக இரண்டு பாடல்களைக் குறித்துக் காட்டினோம். விரிவஞ்சி இவண்முடிக்கின்றோம். வல்லார் வாய்க் கேட்டு நூல் முழுவதையும் அறிந்து இன்புற வாசகர்களை வேண்டுகின்றோம்.

## உடலும் மிகையே!


வாழை இலையின் பயன் உணவு உண்பது. உணவு உண்டபின் அது எச்சிலிலை தானே ? அதை எவன்தான் விரும்புவான்? எச்சிலிலையை எடுத்துப் புறங்கடையில் எறியவேண்டியது தான். அதுபோல் ஆன்மலாபமாகிய சிவ போதத்தை அனுபவித்தார்க்கு இவ்வுடம்பு மிகையே.

—**திருமுருக கிருபானந்தவாரியார்**

# திருமயிலை கபாலீச்சுரம்

**பேராசிரியர் தேவ. நடராஜன்**
**துணைச் செயலாளர், நிதித்துறை.**






**அருள்மிகு கற்பகாம்பாள்**

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டப் கொண்டான் கபாலீச்சுரம்
அமர்ந்தான்...
(திருஞானசம்பந்தா)

செந்தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை மாநகரும் அதன் அணித்தே அமைந்த ஒரு சில இடங்களும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அருள் ஒளிபரப்பும் ஆலயங்களைக் கொண்டவை. வடக்கே திருவொற்றியூரும், தெற்கே திருவான் மியூரும் இம்மாநகருக்குத் தெய்வீகக் கலங்கரை விளக்குகளாக விளங்குகின்றன. வடதிருமுல்லை வாயில், திருவேற்காடு, திருப்போரூர் முதலிய திருத்தலங்கள் சென்னை மாநகரினின்றும் சிறிது தொலைவிலேயே அமைந்து மாநகரின் தெய்வீக மேன்மையை மேலும் மிளிரச் செய்கின்றன. இத்தகைய தெய்வீகச் சூழலில் திகழும் சென்னை மாநகரின் சிறப்பான பகுதிகளுள் ஒன்று திருமயிலை. அழகிய கடற்கரையின் அருகில் அமைந்த பகுதி, பொதுவாக 'மயிலாப்பூர்' என வழங்கப்படுகினறது.


திருமயிலை பழமையும் பெருமையும் வாய்ந்தது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே அது சிறந்து விளங்கி வந்திருக்கின்றதென வரலாற்றுச் சான்றுகள் விளம்புகின்றன. பழங்காலத்து மேனாட்டுப் புவியியல் பேரறிஞரான டாலமி தனது எழுத்தோவியங்களில் மயிலையைப் பற்றிக் குறித்துள்ளார். அவருடைய காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாகும். அவர்மயிலையை 'மயிலார்பன்' என்றுகுறிக்கின்றார். கல்வெட்டுக்களில் இவ்வூரின் பெயர் 'மயிலார்ப்பு' எனவும் 'மயிலாப்பில்' எனவும் 'மயிலார்ப்பில்' எனவும் காணப்படுகின்றது. 'மயிலார்ப்பில்' என்றால் மயில் அகவும் (ஒலித்துக்கொண்டிருக்கும்) இடம்' என்றுபொருள். இச்சொற்றொடரே இவ்வூர்ப்பெயரின் சரியான பழைய வடிவம். அது நாளடைவில் 'மயிலாப்பில்' அல்லது 'மயிலாப்பு' எனத்திரிந்தது என்றும் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

முதலாழ்வார்கள் கி.பி. 5-6ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் ஒருவரான பேயாழ்வாரின்சீடர் திருமழிசை ஆழ்வார் ஆவார். அவர் திருவல்லிக்கேணியைப் பற்றுப் பேசுங்கால் 'மாமயிலை மாவல்லிக்கேணியான்' என்கின்றார். கி. பி. ஏழாம் நூற்றாண்டவரான திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் இவ்வூர் 'மயிலை' 'மயிலாப்பு' என வழங்குகின்றது. ஞானசம்பந்தரின் சமகாலத்தவரான திருநாவுக்கரசர் மயிலையை 'மயிலாப்பில்' எனக் குறித்துள்ளார். சுந்தரரும், திருமங்கையாழ்வாரும் ''மயிலை'' என்றே இவ்வூரினை அழகுற அழைத்து உள்ளனர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ''நந்திக் கலம்பகமும்'' 12-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ''கலிங்கத்துப்பரணியும்'' இவ்வூரினை ''மயிலை'' என்றே குறிக்கின்றன. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டவரான சேக்கிழார் பெருமான் மயிலையை



**பேராசிரியர் தேவ. நடராஜன்**

**எம்.ஏ., மானிடவியல் டிப்ளமா, ஃபோர்டு நிறுவன ஆராய்ச்சிப் பயிற்சி (சென்னை) எப்.ஆர்.இ.எஸ். (இலண்டன்) (புவியியல் டிப்ளமா) பிரெஞ்சு சர்டிபிகேட்) (எம். ஏ.க்கு மேலான பல்கலைக் கழக பொருளியல் டிப்ளமா) (நூலகவியல் சர்டிபிகேட்).**



அருள்மிகு கபாலீஸ்வரர்

''திருமயிலாபுரி'' என வழங்கியுள்ளார். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டவரான அருணகிரியாரும் இவ்வூரினை ''மயிலை'' என்றே அழைக்கின்றார். 'மயிலாப்பு' என்றால் 'மயிலாதல்' எனறு பொருள். உமையம்மை இவ்விடத்து மயில் உருக்கொண்டு இறைவனை வழிபட்டு உய்ந்த அற்புதத்தினையே இப்பெயர் குறிக்கின்றது. மயிலாப்பு' என்னும் சொற்றொடருடன், பின்னாட்களில், தெளிவுநோக்கி ''ஊர்'' என்ற சொல்லும் சேர்ந்து, ''மயிலாப்பூர்'' என்று ஆயிற்று என ஒரு சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர் தம் கருத்துப்படி இவ்வூர்ப் பெயரின் சரியான பழைய வடிவம் 'மயிலாப்பு' என்பதேயாகும்.

திருமயிலைக்குக் கபாலி நகரம், சுக்கிரபுரி, வேதபுரி என்ற வேறு பெயர்களும் உண்டு. பண்டைநாட்களில், திருமயிலை தொண்டை நாட்டின் புலியூர்க்கோட்டத்தினைச் சேர்ந்ததாயிருந்தது.

திருமயிலைதான் வான்மறை உலகுக்குத்தந்த திருவள்ளுவப் பெருந்தகையார் தோன்றிய திருத்தலம் என்று கருதப்படுகின்றது. அப்பெருமகனாருக்கு இவ்விடத்தில் ஒரு திருக்கோயிலும் உண்டு. முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வாரும் அறுபத்து மூன்றுநாயன்மார்களுள் ஒருவரான வாயிலார் நாயனாரும் தோன்றிய திருத்தலமும் இதுவேயாகும். வாயிலார் அகப்பூசையால் இறைவனை வழிபட்டு வீடுபேறு அடைந்தது திருமயிலையில்தான். அவர் ஆற்றிய அரிய வழிபாட்டின் திறன் அறிந்து போற்றுதற்குரியது. கீழ்க் கண்ட பாடல் அதனை அறிவிக்கின்றது;

''மறவாமை யான்அமைத்த மனக்கோயி
லுள்ளிருத்தி
உறவாதி தனைஉணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திரு மஞ்சனம் ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்
சனை செய்தார்''
(திருத்தொண்டர்புராணம்)

இத்திருத்தலத்தில் பழங்காலத்தில் சமண சமயத்தினரான நேமிநாதர் என்னும் தீர்த்தங்கரரின் திருக்கோயில் ஒன்று இருந்ததாகக் கருதப்படுகின்றது. இத்தீர்த்தங்கரருக்கு மயிலைநாதர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஏறத்தாழ கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவிரோதாழ்வார் என்ற சமண சமயப்புலவர் 'திருநூற்றந்தாதி'' என்ற நூலில் திருமயிலையில் இருந்த நேமிநாத தீர்த்தங்கரரின் திருக்கோயில் பற்றுக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு திருமயிலை பிற சமயத்தினரும் போற்றிய ஒரு திருத்தலமாக விளங்கியிருந்த பெருஞ்சிறப்பு ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டவரான நாவுக்கரசர் ஞானசம்பந்தர் ஆகியோரின் தேவாரத் திருப்பாக்களிலிருந்து, திருமயிலை அக்காலத்திலேயே மாட மாளிகைகளும், மலிவிழா வீதிகளும் கொண்ட ஒரு மிகச் சிறந்த நகராக விளங்கி இருந்தது எனத் தெரிகின்றது. சேக்கிழார் பெருமானார் திருமயிலையினைப ''பல்பெருங்குடி நீடு பரம்பரைச் செல்வமல்கிய திருமயிலாபுரி'' எனப் போற்றுகின்றார். கி.பி. எட்டாம் நூற்றாண்டினரான திருமங்கையாழ்வாரால் போற்றப் பெற்ற திருவல்லிக்கேணி, மயிலாப்பூருக்கு அணித்தேயமைந்த ஒரு திருத்தலமாகும். திருமங்கையாழ்வாரின் காலத்தில் திருவல்லிக்கேணி ஒரு சின்னஞ்சிறு சிற்றூராகவோ அல்லது புகழ்பெற்ற திருமயிலையின் ஒரு பகுதியாகவோ இருந்திருக்க வேண்டும். இக்காரணம் பற்றியே போலும் திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் ''மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி'' எனத் திருமயிலையை அதனுடன் சேர்த்தே குறிப்பிடுகின்றார். இவர் காலத்திற்கு முற்பட்ட காலத்தவரான திருமழிசை ஆழ்வாரும் இவ்வாறே பாடியுள்ளதனை முனபே கண்டோம்.

காஞ்சியினைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட பல்லவப்பேரரசர் தம்மை 'மயிலைக்காவலன்' என்று அழைத்துப் பெருமிதம் பூண்டனர். பல்லவர் காலத்தில், மாமல்லபுரம் முக்கிய துறைமுகமாக அமைவதற்கு முன்னர் மயிலாப்பூரே பல்லவர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கியதெனக் கருதப்படுகின்றது. மாமல்லை தோன்றிய பின்பும், மயிலை தனது தனிச் சிறப்புக்குன்றாது, தொடர்ந்து சிறந்த துறைமுகமாக விளங்கி வந்திருக்கிறது. மயிலை பல்லவப் பேரரசில் ஒரு பகுதியின் முக்கிய நகரமாக இருந்ததென்றும், ஸ்ரீகண்டசோழன் என்பான் மயிலையை முக்கிய நகரமாகக் கொண்டு நாட்டின் அரசனாய் இருந்தான் என்றும் அவன் ''மயிலையர்கோன்'' என்று புகழப் பெற்றான் என்றும், பராந்தக வீரநாராயண பாண்டியனின் தளவாய்புரம் செப்பேடுகளைக் கொண்டு ஆராய்ச்சியாளர் ஒருவர் அறிவித்துள்ளார்.

மயிலை பண்டைநாட்களில் பன்னாட்டினரும் கூடும் ஒரு புகழ்பெற்ற பெரியதுறைமுகமாக விளங்கியது என்பதில் ஐயமில்லை. கி.பி. பதினோராம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று இதனை உறுதிப்படுத்துகின்றது. அக்கல்வெட்டு, மயிலையில் நானாதேசிகள் (பலநாட்டினைச்சேர்ந்த வணிகர்கள்) கூடிச் சில தீர்மானங்கள் செய்தனர் எனச் சொல்லுகின்றது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்திருந்த புகழ் பெற்ற வெனிஸ் நாட்டு வழிப்போக்கரான மார்க்கோ போலோ மயிலாப்பூருக்கு வந்தார். அவர் 'மயிலாப்பூர்' என்று அவ்வூர்ப் பெயரினைக் குறிப்பிடவில்லை என்றாலும் தூய தாமஸ் என்ற கிறிஸ்துவ அடிகளாரின் சமாதியிருந்த ஒரு சிறு நகர் பற்றிய வருணனையைத் தந்துள்ளார். அந்நகர் மயிலாப்பூரேயாகும். அவர் அந்நகர் மயில்களுக்குப் பெயர் பெற்றிருந்ததென்றும், தாமஸ் அடிகளார், பறவைகளை வேட்டையாடும் வேடன் ஒருவன் ஒரு மயிலின் மீது எறிந்த அம்பு குறிதவறிப் பாய்ந்ததால் இறந்தனர் என்றும்அக்காலத்தில்நம்பப்பட்ட



கருத்தினையும் குறித்துள்ளார். கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஜான் டீ மரிக்நோலி என்ற வழிப்போக்கர் மயிலாப்பூருக்கு வந்திருந்தார். அவர் மயிலையை ''மைராப் போலிஸ்'' என்று குறிப்பிட்டுள்ளார். மயிலாப்பூரின் மயில்களைப் பற்றியும், மயிலாப்பூருக்குச் சீன நாட்டிலிருந்து கப்பல்கள் வருவது உண்டென்ற செய்திகளையும் அவர் அறிவித்துள்ளார். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் விசயநகர மன்னன் தேவராயனின் ஆட்சியின் கீழ் இருந்த மிக முக்கியமான துறைமுகங்களுள் மயிலாப்பூரும் ஒன்றாக விளங்கியது. பின்னர் கி. பி. பதினாறாம் நூ ற் ற ா ண் டி ல் மயிலாப்பூரிலுள்ள சென்தோம் என்ற பகுதியில் போர்ச்சுகீசிய பாதிரிமார்களும் போர்ச்சுகீசியரும் குடியேறத்தொடங்கினர். விரைவில் சென்தோம் ஒரு மும்முரமான போர்ச்சுகீசியக் குடியிருப்பாக வளர்ந்தது. மயிலை செனதோம் பகுதி, கிழக்குக் கடற்கரையிலுள்ள பலவிடங்களுடன் வாணிபம் செய்ய மிகவும் ஏதுவான இடமாகவிருந்ததும், இவ்வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும். கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் மயிலாப்பூருக்கு வந்திருந்த டூரேட் பார்போஸா என்பவர் மயிலாப்பூரிலிருந்தும், சென்னைக்கு அருகாமையிலுள்ள பழவேற்காட்டிலிருந்தும் ஏற்றுமதியான துணிகள், மலாக்கா, பெகு, சுமத்ரா, சீனா முதலிய நாடுகளில் கடைகளில் காணப்பட்டன எனக் குறித்துள்ளார். அவர் மயிலாப்பூர் நகர் முற்காலத்தில் 12 ''லீக்'' நீளமுடையதென்றும், அது முன்பு கடற்கரையினின்றும் தொலைவில்தான் இருந்ததென்றும், பின்பு கடலரிப்பினால் நிலம் கடலுள் மூழ்கி அந்நகரின் வெகு அருகிலேயே கடல் வந்துவிட்டதென்றும் விவரித்துள்ளார். சீசர் பிரெட்ரிக் என்பவர் கி.பி. 1567-ல் மயிலாப்பூரைப் பற்றித்தான் எழுதிய குறிப்புகளில், இவ்விடத்தில் மக்கள் படகுகளை ஓட்டும் பெருந்திறனை வியந்து போற்றியுள்ளார். ஜான்நையூப் என்பவர் கி.பி. 1662-ல் சென்தோமைப் பற்றி எழுதுங்கால் அதனை உலகின் கிழக்குப் பகுதியில் உள்ள செல்வமல்கியதுறைமுகங்களில் ஒன்று என வருணித்துள்ளார். இவ்வாறு, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு காலங்களிலும் திருமயிலை ஒரு மிக முககிய தலமாகத் திகழ்ந்திருக்கக் காண்கிறோம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் ''அங்கம் பூம்பாவை'' ஆக்கிய பேரற்புதம் திகழ்ந்ததும் திருமயிலையில்தான். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மயிலையில் சிவநேசர் என்ற வணிகர் வாழ்ந்து வந்தார். அவர் ஞானசப்பந்தரிடம பேரன்பு பூண்டவர். தனது ஆருயிர் மகள் பூம்பாவையை அவருக்கே மணம் முடிப்பது என்று அவர் உறுதி கொண்டிருந்தார். ஆனால் அம்மகளோ அரவு தீண்டி இறந்தாள். அவள் உடலை எரித்து எடுத்த எலும்பும் சாம்பலும் நிறைந்த குடத்தை அவர் ஞானசம்பந்தர் மயிலை வந்தபோது அவரிடம் சேர்ப்பித்து வணங்கினார். சிறநத பக்திச் செல்வரான சிவநேசரின துயரினைத் துடைக்கத் திருவுள்ளங் கொண்ட திருஞானசம்பந்தர், குடத்தில் எலும்பும் சாம்பலுமாகக் கிடந்த பூம்பாவையினை நோக்கித் திருப்பதிகம் பாடித் திருவருளைச் சிந்தித்தார். ஒவ்வொரு திருப்பாடலிலும் பூம்பாவையின் உருவம் வளர்ந்தது. பத்தாவது திருப்பாடல் பாடி முடித்ததும் பூம்பாவை முழுதும் உயிர் பெற்றுக் குடத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து நின்றாள். எல்லாம் வல்ல இறைவன் தனது ஞானக் குழந்தையான ஞானசம்பந்தரின் அளவிடற்கரிய பெருமையினை உலகிற்கு அறிவிக்கவே இப்பேரற்புதச் செயலை அவர் மூலம் நிகழ்த்தினார் போலும். மண்ணிற் பிறந்தார் பிறவியின் பயனாகத் தவறாது செய்யவேண்டுவன அடியார்தமை அமுதுசெய்வித்தலும், இறைவனின் நல்விழாப் பொலிவுகளைக் கண்டு நலம்பெறுதலுமாகும் என்பதனைத் திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தின் மூலம் இபபெருநிகழ்ச்சி உலகிற்கு உணர்த்தியது இப்பேரற்புதம் கண்ட திருமயிலை, ஞானசம்பந்தர் நவின்ற பேருண்மைகளை உலகிற்கு என்றும் நினைவூட்டி நிற்கிறது.

பழமையும் பெருமையும்மிக்கத் திருமயிலையில் உள்ளது கபாலீச்சுரர் திருக்கோயில். இது தமிழ்நாட்டின் தலைசிறந்த சிவத்தலங்களுள் ஒன்று. இது சைவசமயாசாரியரான நாவுக்கரசர் ஞானசம்பந்தர், சுந்தரர் ஆசிய மூவரும் போந்து வழிப்பட்டதாகக் கருதப்படும் பெரும் புண்ணியத் தலம். இது ஞானசம்பந்தர் பக்தியோங்கச் செய்யும் தேவாரத்திருப்பாக்களால் பரவி மகிழ்ந்த 'பாடல் பெற்றதலம்'; அருணகிரியாரால் பாடப் பெற்ற சிஙகாரவேலர் திருக்கோயில் கொண்டிருக்கும் திருத்தலம்.

இத்திருத்தலததில் இறைவன் மேற்கு நோக்கிய திருமுகத்துடன் இருப்பதும், அத்திரு மூர்த்தம் நோக்கும் மேற்குத் திக்கிலேயே தருக்குளமஅமைந்து இ ரு ப் ப து ம் இத்திருத்தலத்தின் சிறப்பியல்புகளாகும். இத்தனிப்பெருஞ் சிறப்பினைச் சைவ சமயச் செல்வர் ஒருவர் தெளிவுறக் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்;

''சென்னை மயிலாப்பூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கபாலீச்சுர மூர்த்தம் ''சத்தியோஜாத மூர்த்தம்'' ஆதலால், அது வழிபடுவார்க்கு உடனே காட்சி தந்து அருள் வழங்குவதாகும்.''

''சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு நோக்கிய திருமுகம் சத்தியயோஜாதம் எனப்படும். கபாலீச்சுர மூர்த்தம் மேற்கு நோக்கிய மூர்த்தமாகும். அந்த மூர்த்தம் நோக்கும் மேற்குப் பக்கத்திலேயே தடாகம் இருக்கிறது. இறைவனின் நெற்றியை குளம் என்ற சொல் குறிக்கும். அவன் நெற்றி நோக்கும் தடாகமே உண்மையில திருக்குளமாகும். எனவே, மயிலைத் தடாகமே உண்மையில் திருக்

குளம் எனப்படும். கபாலீச்சுர இறைவன் நெற்றிக்கெதிரே இருத்தலால் கபாலீச்சுரரின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அம்பிகை கற்பா காம்பாள் என்று அழைக்கப் பெறுகிறாள். விரும்பி யதைத் தருவது கற்பகம். எனவே விரும்பியதை உடனே அளிப்பவள் கற்பகாம்பாள். விரும்பியதை உடனே பெற விழைபவர், மயிலைத் திருக்குளத் தில் நீராடிக் கற்பகாம்பாளுடன் கோயில்கொண் டிருக்கும் கபாலீச்சுரரை வழிபடல் வேண்டும்.'

''அம்பிகை கற்பகாம்பாள் என்று அழைக்கப் பெறுகிறாள். விரும்பியதைத் தருவது கற்பகம். விரும்பியதை உடனே பெற விழைபவர் மயிலைத் திருக்குளத்தில் நீ ரா டி கற்பகாம்பாளையும் கபாலீசுவரரையும் வழிபட வேண்டும்''.

கபாலீச்சுரத்தில் சிங்காரவேலர் திருக்கோயில் கொண்டுள்ளது பிறிதொரு சிறப்பாகும். 'சிங்கார வேலர்' கபாலீச்சுரரை வழிபட்டு, சூரபதுமன் முதலிய அரக்கர்களை வெல்ல 'சக்திவேல்' பெற்ற தால் அப்பெயர் பெற்றார். அருணகிரியார் இச் சிங்காரவேலரை பரவிப் பாடியுள்ளார்.

'இனி' கபாலீச்சுரம்' என்ற பெயர்க்கார ணத்தைப் பார்ப்போம். 'காபாலிகம்' என்பது சைவசமய உட்பிரிவுகளுள் ஒன்று என்றும், அப் பிரிவினர் சிறப்பாக வழிபட்ட கோயில்கள்'கபாலீச் சுரம்' என வழங்கப்பட்டன என்றும், அத்தகைய கோயில்களுள் மயிலைக் கபாலீச்சுரமும் ஒன்றாகும் என்றும் அறிஞர்கள் கூறுவர். பிரளய காலத்தில் பரம்பொருளான சிவன் கையில் கபாலம் ஏந்தித் தனித்து நிற்பதாக ஒரு ஐதீகம். அவர் தனது எல்லையற்ற அருள்கருணையால் மீண்டும் ஆக்குந் தொழிலையும் மேற்கொள்ளுகின்றார். ஒடுக்குந் தொழிலினை ஆற்றும் பரம் பொருளே மீண்டும் ஆக்குந்தொழிலினையும் செய்ய வல்லவராவார். ஆதலால்கபாலீச்சுரத்தத்துவம் மிகஉயர்ந்த ஒன்றா கும். இஃதன்றி, கபாலீச்சுரம் பற்றிய ஒரு சுவை யான புராணச் செய்தியும் உண்டு. ஒருபொழுது, கயிலையில், பிரம்மாவின் அகங்காரத்தினைஅடக்க எண்ணிய சிவபெருமான், பிரம்மனது தலைகளில் ஒன்றினை அறுத்துச் சேதப்படுத்தினார். பின்னர், பிரமன் மயிலைத் திருத்தலத்தில் சிவனை வழி பட்டு நலம் பெற்றான். இச்சிரச்சேத நிகழ்ச்சி யினை, நினைவுகூறும் வகையில், இத்தலத்தில் சிவ பெருமான் 'கபாலி' என்று திருநாமம் பெறுதல் வேண்டும் என பிரமன் வேண்டினான். அவ்வாறே சிவபெருமான் அருள, மயிலைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் 'கபாலீச்சுரர்' எனப் பெயர் பெற்றார். கோயிலின் திருக்குளம் 'கபாலி தீர்த்தம்' என்றும் திருக்கோயில் 'கபாலீச்சுரம்' என்றும் வழங்கலாயின.

திருமயிலையில் உமையம்மை மயிலுருவெடுத் துச் சிவ வழிபாடு செய்து, சிவபெருமானுடன் சேர்ந்ததும் ஒரு சுவையான புராண வரலாறாகும். ஒருபொழுது, கயிலையில், சிவபெருமான் அம்மை யுடன், திருநீறு, திருவைந்தெழுத்து முதலியன பற்றி உரையாடிக் கொண்டிருக்கையில் அம்மை யின் நினைவு இறைவனின் பேச்சில் முற்றும் பொருந்தாமல் அங்குத் தோகையை விரித்தாடிக் கொண்டிருந்த ஒரு மயில் மீது சென்றதாம். அம்மை யின் தவற்றினை அறிந்த சிவனார் அம்மை மயில் உருப்பெற்றுத் தன்னை வழிபட்டு உய்க எனத்திரு வுள்ளம் பற்றினார். தன் தவற்றினை உணர்ந்த அம்மையும் மயிலுருவில் மயிலாப்பூரில் புன்னை மரத்தடியில் சிவலிங்க வழிபாடு செய்து சிவனரு ளால் மயிலுரு நீங்கப் பெற்றுச் சிவனாருடன் சேர்ந்தனள். இந்நிகழ்ச்சி பற்றியே அம்மை மயிலு ருவில் சிவ வழிபாடு செய்தவிடம் 'மயிலாப்பு', மயிலாப்பூர்' 'மயிலை' என வழங்கலாயிற்று. மயிலைத் திருத்தலத்திற்குத் திருவண்ணாமலை ஆதீனத்தினைச் சார்ந்த தவத்திரு அமிர்தலிங்கத் தம்பிரான் அவர்களால் இயற்றப்பட்ட தலபுராண ணம் உண்டு. இந்நூலில் இத்திருத்தலத்தின் அற் புதங்கள் பற்றிய பல அரிய செய்திகள் உள்ளன. இஃதன்றி, 'திருமயிலை உலா', 'திருமயிலைக் கலம்பகம்', 'கபாலீச்சுரர் பஞ்சரத்தினம்','கற்பக வல்லிமாலை', 'சிங்காரவேலர் வெண்பா', 'திருமயிலையமக அந்தாதி' முதலியவற்றினையும் அத்திருத்தலம் பெற்றுள்ளது.

இன்றுள்ள கபாலீச்சுரம் பற்றிய பிறசெய்திகள்; இத்திருக்கோயிலின் இறைவர் கபாலீச்சுரர் பிர திட்டை செய்யப் பெற்ற சிவலிங்கம், இறைவி கற்பகாம்பாள் (கற்பகாம்பிகை அல்லது கற்பக வல்லி). கபாலீச்சுரரின் சன்னதிக்கு வடபாகத்தில் தனிச் சன்னதியில் நிற்கின்ற கோலத்தில் தெற்கு நோக்கிய திருமுகத்துடன் காட்சிதரும் திருமேனி உடையாள். இத்திருக்கோயிலின் தல விநாயகர் கூத்தாடும் விநாயகர். இங்கு, அருணகிரியாரால் பாடப்பெற்ற சிங்காரவேலர் ஒரு தனிக் கோயிலில் திருக்காட்சி தருகின்றார். பழனியாண்டவர், வாயிலார் நாயனார், திருஞான சம்பந்தர் - அங்கம்பூம்பாவையார் முதலியவர்க்கும் இங்கு தனிச் சன்னதிகள் உண்டு. இக்கோயிலின் அழகிய உருவ வேலைப்பாடுகளைக் கொண்ட கோபுரம் ஏறத்தாழ 120 அடி உயரமுடையதாய்க் கபாலீச்சுரத்தின் சிறப்பினைக் காண்போர் அனை வருக்கும் நினைவூட்டி நிற்கின்றது.

இத்திருக்கோயிலில் பங்குனி மாதம் (மார்ச்- ஏப்ரல்) வளர்பிறைப் பௌர்ணமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாட்கள் திருவிழா (பிரம்மோற்சவம்) வெகு சிறப்புற நிகழும். அவ் விழாவில் எட்டாவது நாள் நடக்கும் 'அறுபத்து மூவர் உற்சவம்' திருமயிலைக்கே சிறப்பு தருவ தாகும். அவ்விழாவினைக் காண ஏறத்தாழ ஐந்து இலட்சம் மக்கள் திருமயிலையில் கூடுவர். அத்திருக் காட்சி அனைவரும் கண்டு களிபேருவகைக்கொள் ளத்தக்கதாகும். திருச்செங்காட்டங்குடியில் நிகழும் 'அமுதுபடையல் விழா' காரைக்காலில் நிகழும் 'மாங்கனி உற்சவம்' திருவொற்றியூரில் நிகழும் 'மகிழடிசேவை' போன்றே 'அறுபத்து மூவர் உற்சவமும்' திருமயிலைக் கபாலீச்சுரத்தின் தனிப்பெரும் விழாவாகும்.

## சேரிடம் அறிந்து சேர்

கண்ணில்லாத பசு மந்தையுடன், கூடி னால் உராய்ந்து கொண்டே வந்து தொழு வத்தைச் சேரும். அதுபோல் ஞானவிழியற்ற மாந்தர் அடியார் குழாத்துடன் சேர்ந்தால் எளிதாக முத்தி நலம் பெறுவர்.

—திருமுருக கிருபானந்தவாரியார்



# கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் ந. அமிர்தலிங்கம் [18]

எம்பெருமான் இராமர் அவதாரம் செய்த காரணம் பற்றியே அயோத்தி மாநகரம் முத்தித் தலங்கள் ஏழுனுள் முதலாவது திருத்தலமாகப் போற்றப்படுகிறது. அத்தெய்வமாநகர் அயோத்தியில் வாழும் மக்கள் எல்லோருமே முதியவர், இளையவர், ஆடவர், பெண்டிர் ஆகிய அனைவரும் இராமரைப் பின் தொடர்ந்து வனத்திற்குச் செல்கிறார்கள். இராமருடன் வனத்திற்குப் புறப்படாதவை உயிரிலாத ஓவியங்கள் மட்டுமே என்று வர்ணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்
மாவியல் தானையின் மன்னை நீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர் தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன உயிரிலா மையால்''

தசரதரின் அறுபதினாயிரம் தேவிமாரும் இராமரின் பிரிவால் உணர்ச்சியற்று உயிரிலா ஓவியங்களாகவே மாறிவிட்டிருந்தனர். ஆகவே அவர்களையும், ஓவியங்களையும் இணைத்து இப்பாடலில் சுட்டியிருக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

கண்ணீர் வெள்ளம் வடித்தவாறு மக்கள் வெள்ளம் இராமரின் தேரைப் பின் தொடர்கிறது. இக்காட்சியைத் திருமாலின் மச்சாவதாரக் காட்சியோடு உவமித்துப் பாடுகிறார் கம்பர். ஏழுலகங்களும் தன்னுள் அடங்கும்படி பரந்தது ஊழிவெள்ளம். அவ்வூழி வெள்ளத்தில் திருமால் தெய்வ மச்சமாக அவதாரம் செய்து தாம் தனியாக உலாவியது போன்றே, மக்கள் வெள்ளம் முன்னும் பின்னும் சூழ்ந்துவர இராமரின் தேரும் நீந்தி மிதந்து செல்கிறது என்று வர்ணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''கைகணீர் பரந்து கால்தொடக் கண்ணுகும்
வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச் சேறலால்
உய்ய ஏழுலகும் ஒன்றான நீருலாம்
தெய்வமீன் ஒத்தது அச்செம்பொன் தேர்அரோ''

சூரியகுலம் தழைக்கத் தோன்றிய அரசகுமாரர்களில் மிகச் சிறந்தவராகத் தோன்றியிருப்பவர் நம் இராமரே. இவ்வாற்றல்மிகு பெருந்தகை ஊழ்வினை வயத்தால் மகுடம் சூடக் குறிக்கப்பெற்ற மங்கல நாளிலேயே மரவுரி அணிந்து வனம் செல்ல நேரிட்டுவிட்ட கொடுமையைக் காணச் சகியான் ஆயினான் கதிரவன். ஆகவே இராமரின் தேர் அயோத்தியை விட்டுப் புறப்படுவதைக் காணச் சகியாமல் கதிரவனும் மேற்காக ஓடி மறைந்துவிடுகிறான். அயோத்தி மகளிரின் வாடிய முகங்களைப் போலவே, தாமரை மலர்களும் வாடி முகம் கூம்பிவிடுகின்றன. ஆகாயமும் மந்தரையின் போதனையால் இருண்டுபோன கைகேயின் மனம் போலவே இருளடைந்து போகிறது. இவ்வாறாக சூரியாஸ்தமனத்தை இராமரின் பிரிவோடு இணைத்து வர்ணித்து பாடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

இராமரின் தேர் அயோத்தியிலிருந்து மெல்ல ஊர்ந்துபோய் முன்னிரவு நேரத்தில் இரண்டு யோசனை தூரத்திலிருக்கும் ஒரு சோலையைச் சென்று சேர்கிறது. இரவில் பயணத்தை மேலும் தொடர்வது தம்முடன் திரண்டு வரும் மக்களுக்கு மேலும் துயரம் தருவதொன்றாகும் என்றெண்ணி இராமர் அச்சோலையிலேயே தேரை நிறுத்தும்படி சுமந்திரரைக் கேட்டுக் கொள்கிறார். இராமரைத் தொடர்ந்து வந்த மக்களும் அச்சோலையைச்சுற்றி ஒரு யோசனைப் பரப்பில் எள்ளிடவும் இடமில்லா வண்ணம் நெருங்கித்தங்கி யிருக்கிறார்கள். அவ்வாறு தங்கியிருக்கும் மக்களில் அரசகுடும்பங்களைச் சேர்ந்த ஆடவரும், பெண்டிரும் கூட இருக்கின்றார்கள். ஆண்யானைகளைப் போன்ற சிற்றரசர்கள், இளமான்களைப் போன்ற பெண்டிர்கள் அரச போகத்தைத் துறந்து வந்து அச்சோலையில் இலை தழைகளையே மெத்தையாக பாவித்து அவற்றின் மேல் படுத்துக் கண் உறங்குகிறார்கள். மயில் போலவும், அன்னம் போலவும் திகழும் எழில் மங்கையர் பலரும் தத்தம் செவிலித்தாயர் தம் தொடைமீது தலைவைத்துத் துயில்கின்றனர். பச்சிளங் குழந்தைகளுடன் வந்திருக்கும் பெண்டிர் பலரும் தத்தம் புடவைத் தலைப்புகளையே விரித்து அவற்றில் குழந்தைகளை உறங்கவைத்துத் தாமும் உறங்குகிறார்கள்.

இராமர் வனம் போகிறார் என்று கேள்விப்பட்ட நேரம் முதலாகவே அவர்களில் ஒருவரும் உணவைக் கண்ணால் காணவும் இல்லை. உணவுண்ணாமல் இருக்கிறோம் என்ற உணர்வும் கூட அவர்களுக்குத் தோன்றிடவில்லை. பசி தாகம் மறந்து வீடு வாசலை மறந்து இராமர் இருக்கும் இடமே அயோத்தி என்பதாக அவர்கள் வந்து இச்சோலையைச் சூழ்ந்துள்ளனர். தம்மையும் மீறிய களைப்பால் கல்லிலும் முள்ளிலுமாக படுத்து அவர்கள் கண்ணுறங்கக் காணும் இராமர் தம்பொருட்டு அம்மக்கள்படும் துயரத்தைக் கண்டுசொல்லொணா



வேதனையில் துடிக்கிறார். அருட்கடலாகிய இராமர் மக்களின் இக்கொடிய துயரம் கண்டும் எப்படித் தாம் தூங்குவார்? அமைச்சர் சுமந்திரரை அழைத்துத் தனியே சென்று பேசுகிறார். ''அருங்குணங்களைக் கொண்டவரே! என் தந்தையைப் போன்றவரே! உம்மால் இப்பொழுது எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டும். என்பால் மட்டிலாப் பேரன்பு பூண்ட இம்மக்களை அயோத்திக்குத் திரும்புங்கள் என்று நான் எவ்வளவு வேண்டினாலும் அவர்கள் கேட்க மாட்டார்கள். இவர்கள் அயர்ந்து கண் உறங்கும் இவ்வேளையில் நீங்கள் தேரை அயோத்திக்குச் செலுத்துங்கள். நாங்கள் மூவரும் இங்கிருந்தே கால்நடையாகக் காட்டிற்குப் புறப்படுகிறோம். மக்கள் காலையில் எழுந்து தேர் அயோத்தியை நோக்கிச் சென்றிருக்கும் சுவட்டைக் காண்பார்கள். நாம் அயோத்திக்குத் திரும்பிவிட்டதாகவே எண்ணி, அவர்களும் திரும்பிவிடுவார்கள். இதை நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டும்''.

இராமன் இவ்வேண்டுகோளைச் செவிமடுத்ததும் அமைச்சர் சுமந்திரர் ஆற்றொணாத் துயரில் விம்முகிறார். ''இராமா! நீயும் உன் தேவியும் இளவலும்இல்லாமல்எப்படிநான்தேரைஅயோத்திக்குச் செலுத்துவேன்? அப்படி நான் செலுத்திச் சென்றால் அயோத்தியில் என்ன நிகழும் என்பதை நீ எண்ணிப் பார்த்தாயா? வாஞ்சைமிக்க இம்மக்களின் முகங்களைப் பார். இவர்களின் துயரத்தைத் தீர்க்கும் பொருட்டு நீ அயோத்திக்கே திரும்பிவிடு. எபபடியும் இம்மக்களுக்காக நீ அயோத்தி திரும்பி வருவாய் என்ற நம்பிக்கையில்தான் அங்கே சக்கரவர்த்தி தம் உயிரைத் தாங்கியிருப்பார். அவரிடம் போய் இராமர் காட்டிற்குப் போனார் என்று நான் சொன்னால் அடுத்த நிமிடமே அவர் உயிரும் பறந்துவிடும். சக்கரவர்த்தியைக் கொன்ற கொலைகாரன் என்று உலகம் பழிப்பதற்காகவா என்னை நீ ஊருக்கு புறப்படச் சொல்கிறாய்? நீங்கள் மூவரும் நடந்து வனம் போக, நான் தேரேறி நாட்டுக்குள் செல்வேனேயானால் கைகேயியினும் கொடியவன் இச்சுமந்திரன் என்றே என்னை வையம் பழித்துப் பேசும். மக்களின் வசைக்கு ஆளாவதை விட நான் மடிந்து போவதே மேல்'' என்று கூறி கண்ணீர் பெருக்குகிறார் சுமந்திரர்.

''அரிய வேள்வி செய்து நீ பெற்ற ஆண் சிங்கம் உனைப் பிரிந்து வனம் ஏகிவிட்டது என்று நான் சக்கரவர்த்தியிடம் போய் சொல்லமாட்டேன். உங்களை விட்டுப் போகவும் மாட்டேன். மாட்டேன்'' என்றும்கூறிச் சுமந்திரர் இராமரின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு கண்ணீர் வடிக்கிறார்.

இராமர் சுமந்திரரைத் தம் கைகளால் வாரித் தோளுற அணைத்துக்கொண்டு ஆறுதல்கூறுகிறார். பிறிதொரு அவதாரத்தில் பார்த்தனின் சாரதியாக வீற்றிருந்து கீதை உபதேசிக்கப்போகும் பரம்பொருளான இராமர், இப்பொழுது தம் சாரதியாக வந்திருக்கும் சுமந்திரருக்கு நீதியை எடுத்துப் போதிக்கிறார்.

''பிறப்பு எப்பொழுது உண்டோ, அப்பொழுதே இன்ப துன்பமும் உண்டு. துன்பம் உண்டாகுமே என்று அறம் தவறுவது-தந்தையின் வாக்கைத் தட்டி நடப்பது எனக்கும், நான் பிறந்த சூரிய குலத்திற்கும் நீங்காத பழியை உண்டாக்கிவிடும். ஆயுதங்களைத் தாங்கிப் போரிடுவது எளிய வீரம். செல்வமெல்லாம் இழக்கநேர்ந்தாலும் ஆருயிரே இழக்க நேர்ந்தாலும் அறத்தைக் கைவிடாத அரிய குணமே மாவீரமாகும். நான் இப்பொழுது வனம் செல்வதால் பெற்ற மகனையே சத்தியம்

காக்கக் காட்டிற்குக் அனுப்பினார் என்ற புகழே என் தந்தைக்கு உண்டாகும். எனக்கும் தந்தை சொல் காத்த தனயன் என்ற பெருமை உண்டாகும். ஆகவே என் தந்தையைப் போன்ற தாங்கள் நான் வனம் போவதைத் தடுக்கவும் கூடாது. நான் சொல்வதை மறுக்கவும் கூடாது.''

''இப்பொழுதே தேரைச் சித்தம் செய்து அயோத்திக்குப் புறப்படுங்கள். வசிட்ட முனிவரிடம் என் வணக்கத்தைக் கூறுங்கள். அதிகம்இல்லை: ஏழிரண்டே ஆண்டுகள் காட்டில் கழித்தபின் விரைந்துவந்து தந்தையின் திருவடி பணிவேன் என்பதைக் கூறி சக்கரவர்த்தியைத் தேற்றும்படி கூறுங்கள். அரசநீதிமுறை வழுவாமல் பரதன் ஆட்சி புரியவும் அவனுக்கு உறுதுணை புரியுமாறு வசிட்டரை நான் வேண்டியதாகக் கூறுங்கள். கைகேயியால்தான் நான் காட்டிற்குச் செல்ல நேர்ந்தது என்று எண்ணிடாமல் அன்னையிடமும் என்னிடம் காட்டிய கருணைப் போலவே கருணை காட்ட நான் வேண்டியதாகக் கூறுங்கள். என்னைப் பெற்ற தாயர் மூவருக்கும் என் குறைவில்லா நெடிய வணக்கத்தை முறையாகக் கூறிச் சக்கரவர்த்தியின் துயரத்தையும் மாற்றி அவருடனேயே முன்போல் நீங்களும் என்றும் உடன் இருந்து வாருங்கள்.''

தம்மைக் காட்டிற்கு விரட்டியபழி தம் அன்னை கைகேயிக்கு வந்துவிடக்கூடாது என்பதிலும், பாவம் ஒன்றும் அறியா பரதனின் நல்லாட்சிக்கும் அதனால் ஒரு மாசு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் இராமர் எத்தகைய ஆர்வம் உடையவராக இருக்கிறார்என்பதற்குச்சுமந்திரரிடம் அவர் தெரிவிக்கும் இவ்வேண்டுகோள்களே மிகச்சிறந்த சான்றாகும். சுமந்திரர் தசரதரின் உயிர்கொள்ளும் கூற்றுவனாகத் தாம் விரும்பவில்லை என்று கூறியிருந்தார் அல்லவா; அதை மனதில் கொண்டும் இராமர் வசிட்ட முனிவர் வாயிலாகவே தசரதருக்கு உற்றதுணர்த்துமாறு வேண்டுகிறார். தம்மால் யார் ஒருவருக்கும் ஒரு சிறு ஊறும் உண்டாவதை இராமர் விரும்புபவர் அல்ல என்பதற்கு இந்நிகழ்ச்சி மிகச் சிறந்த சான்றாக இலங்குகிறது.

இராமரின் பரந்து விரிந்த கருணை உள்ளத்தை அமைச்சர் சுமந்திரரும் உணர்ந்து தெளிவு பெறுகிறார். ''எல்லாம் ஊழ்வினையின் செயல்'' என்பதாகவும் எண்ணி அவர் தம்மைத் தேற்றிக் கொண்டு இராமரின் அறிவுரைப்படியே நடந்து கொள்வதாகக் கூறுகிறார். அப்பொழுது சீதையும் தன் செய்தியாகச் ''சக்கரவர்த்திக்கும் என் அத்தையர்க்கும் என் அன்பு வணக்கங்களைக் கூறுங்கள். நான் ஆசையுடன் வளர்த்து வந்த கிளியையும் நாகணவாய்ப் பறவையும் பாதுகாத்து வளர்க்கும்படி என் தங்கைமார்களுக்கும் கூறுங்கள்'' என்று சுமந்திரரைக் கேட்டுக் கொள்கிறாள்.

''அன்னவள்கூறுவாள் அரசர்க்கும் அத்தையர்க்கும்
என்னுடை வணக்கமுன் இயம்பி யானுடைய
பொன்னிறப் பூவையுங்கிளியும் போற்றுமின்
என்பமற் றெங்கையர்க் கியம்புவாயென்றாள்''

காட்டிற்குப் புறப்படுவதால் கல்லிலும் முள்ளிலும் தானே நடந்து வருந்த வேண்டிய துன்பம் இருக்க அரண்மனையில் சுகமாக வளரும் பறவைகளை எண்ணி வருந்துகிறாளே என்பதாக எண்ணும் சுமந்திரர் ஆருயிர்கட்கெல்லாம் அன்பு பாராட்டும் சீதையின் பாச உள்ளம் கண்டு நெகிழ்ந்து போகிறார். கண்ணீர் மல்க வணங்கிச் சீதையிடமும் விடைபெறுகிறார். இறுதியாக இலக்குவனிடம் ''அரசருக்கு உன் செய்தியைக் கூறி எனக்கு விடைதருக'' என்று வேண்டுகிறார். நீறு பூத்த நெருப்பாக உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருக்கும் இலக்குவனோ அதைக் கேட்டதும் கொதித்துப் பேசுகிறான். ''ஒரு பெண்ணுக்கு அரசைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்ட ஒருவர் எனக்குச் சக்கரவர்த்தியும் அல்லர்; அவருக்கு நான் சொல்லி அனுப்ப வேண்டிய சேதியும் ஒன்றும் இல்லை. மகனோ கானகம் போகிறான் கிழங்குகளைத் தேடி உண்ண. அறுசுவை விருந்தை உண்ண அவாவி மன்னனோ இன்னும் அரண்மனையிலே இருந்துகொண்டு இருக்கிறான். இன்னும் வானகம் புறப்படாமல் உயிருடன் இருக்கும் அவருடைய இதயம் என்ன இதயமா என்று நான் கேட்டதாகக் கூறுங்கள்'' என்றும்சீறுகிறான் இலக்குவன்.

''கானகம் புற்றி நற் புதல்வன் காயுணப்
போனகம் பற்றுமவ் பொருவில் மன்னவற்கு
ஊனகம் பற்றிய உயிரோடு இன்னம் போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்றான்''.

இன்னும் இலக்குவன் சொல்கின்றான்: ''தசரதரால் மறுக்கப்பட்ட மணிமுடியை நான் இராமனுக்குப் பெற்றுத்தந்திருப்பேனேயானால் என்னைஅவருடைய தம்பி என்று கூறலாம். அப்படி செய்யாத நான் இராமருக்கும் தம்பி அல்லன்; இராமருக்குரிய மகுடத்தைக் கவர்ந்து கொண்ட பரதனோ எனக்கு உடன்பிறந்தான் அல்லன். பரதனுடன் இணைபிரியாதவனான சத்ருக்கனனையும் நான் தம்பியாக எண்ணப்போவதில்லை. ஆகவே எனக்கு உறவென்று யாருமே இல்லை. நான் ஒரு தனிமரம். என் இதயமும் கடியதாக இருப்பதால் இன்னும் இவ்வேதனைகளுக்கிடையில் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்''.

இலக்குவன் இவ்வாறு கூற இராமர் இப்பொழுதும் ''சிறப்பற்ற வார்த்தைகள் சொல்லாதே'' என்று தடுக்கிறார். இத்தகைய பாசமும் நேசமும் மிக்க அரசகுமாரர்கள் வனம் செல்ல நேர்ந்ததே என்று வருந்தியவாறு தரையில் விழுந்து வணங்கி

---

## முத்திக்கு வழி

மும்மலநீக்கமே முத்திக்குச் சாதனமாம்- அரிசியின் சுபாவமான வெள்ளை நிறத்தை மறைத்த தவிடுபோல், ஆன்மாவின் ஞானத்தை ஆணவ அழுக்கு மறைத்திருக்கின்றது.

அரிசி—ஆன்மா
தவிடு—ஆணவம்
முளை—கன்மம்
உமி—மாயை

எனவே அரிசிக்குத் தவிடு, முளை, உமி என்ற மூன்றின் தொடக்குளது போல் ஆன்மாவுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத் தொடக்குண்டு. உலக்கையால் தவிடு, முளை, உமிகளை நீக்குவது போல் குருநாதனுடைய ஞானோபதேச மென்னும் உலக்கையால் மும்மலத் தொடர்பை ஒழிக்க வேண்டும்.

—திருமுருக கிருபானந்தவாரியார்.

---

இராமரிடம் விடை பெற்றுக் கொள்கிறார் சுமந்திரர். உறங்கிக் கொண்டிருக்கும் மக்கள் ஒருவரும் உணராத வண்ணம் தேரில் குதிரைகளைப் பூட்டுகிறார். ஓசை சிறிதும் எழாதபடி பக்குவமாகத் தேரை அயோத்தியை நோக்கிச் செலுத்துகிறார். இராமரும் தம் இல்லாள் சீதையின் சிறந்த கற்பும் தம்பி இலக்குவனின் பரிவும் தம் கைவில்லும், தருமமே துணையாக இவ்விரவு நேரத்திலேயே அச்சோலையை விட்டுப் புறப்பட்டு வனம் நோக்கி நடக்கின்றார்.

''தையல்தன் கற்பும் தன்தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே''.

தேவர்களின் பகையான அரக்கர்களை அழித்துத் தருமத்தைக் காக்கும் பொருட்டே இராமர் வனம் நோக்கிப் புறப்படுகிறார். ஆகவே இரவில் வனம் செலும் அவருக்கு உதவியாக ஒரு ஒளி விளக்கை வானத்தில் ஏற்றிவைத்து வழிகாட்டுவோம் என்று நினைத்தார்களாம் தேவர்கள். தேவர்கள் ஏற்றிவைத்த ஒளிவிளக்கேபோல உதயமாயிற்று தெய்வத் தன்மையுள்ள சந்திரன் என்று சந்திரோதயத்தை வர்ணிக்கின்றார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். மறம் போக்கி அறம் காக்க வந்த பரம்பொருளே இராமபிரான். அவர் வனம் வந்தால் அன்றி அரக்கர்களை வதைக்கும் அவர்தம் குறிக்கோள் நிறைவேற வாய்ப்பில்லை. ஆகவே இராமர் வனம் வந்ததற்குக் காரணம்தீவினையன்று தான் செய்த நல்வினையே என்று மகிழ்கின்றாளாம் தரும தேவதை.

''தருமத்தின் வதனம் என்ன பொழிந்தது தனிவெண் திங்கள்'' என்றும் வர்ணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

கானகத்தின் கல்லும் முள்ளும் உறுத்தாதபடி பஞ்சை எங்கும் பரப்பி வைத்ததைப் போல நிலவொளி திகழும் அவ்விரவிலேயே, நீர்க் குமிழி போன்ற மென்மையான சிற்றடிகளைக் கொண்டு விளங்கும் சீதை தன் மணாளன் மேல் தான் கொண்டிருக்கும் தன் குற்றமற்ற அன்பையே வலிமையாகக் கொண்டு வனத்திலே நடந்து செல்கிறாள். அதே நேரத்தில் சுமந்திரர் அருவிபோல் நீர் கொட்டுகின்ற கண்களுடனும், புண்பட்டு இரத்தம் சோர்கின்ற நெஞ்சுடனும் அயோத்தி அரண்மனையைச் சென்றடைகிறார். ''தேர் வந்து விட்டது; தேர் வந்து விட்டது. இராமர் திரும்பி விட்டார்'' என்பதான ஆரவாரம் உண்டாகப் பலரும் வந்து ஆவலோடு சூழ்ந்து கொண்டு விடுகிறார்கள். தேரிலிருந்து இராமரோ, சீதையோ, இலக்குவனோ இறங்கவில்லை. கண்ணீர் வடித்துக் கொண்டு சுமந்திரர் மட்டுமே தேரிலிருந்து இறங்கக் காணும் பலரும் ''ஆ, ஐயோ'' என்று வேதனையால் துடிக்கின்றார்கள்.

வசிட்டரைக் கண்டு வணங்கி சுமந்திரர் நிகழ்ந்ததெல்லாம் கூறுகிறார். இருவருமாகச் சேர்ந்து தசரதரின் மாளிகைக்குச் செல்கிறார்கள். ''தேர் வந்து விட்டது'' என்ற ஆரவாரத்தால் மயக்கம் தெளிந்து கண் விழித்த தசரதரும் வசிட்டரைக் கண்டு ஆவலுடன் ''இராமன் வந்தானா?'' என்று ஆவலோடு வினவுகிறார். ''இல்லை'' என்பதாகத் தலையை மட்டும் அசைக்கும் முனிவர் மேலும் அங்கு நிற்கும் துணிவில்லாமல் அகன்று போய்விடுகிறார். ''இராமன் அயோத்தியில்தான் இருக்கிறானா? இல்லை காட்டிற்குப் போய் விட்டானா?'' என்று சுமந்திரரிடம் வினவுகிறார் தசரதர். ''சீதையும் இலக்குவனும் உடன்வர இராமர் காட்டிற்குப் போய்விட்டார்'' என்று சுமந்திரர் சொன்னாரோ இல்லையோ தசரதரின் ஆவியும் அதைக் கேட்டதும் பறந்து போய்விடுகிறது.

''நாயகன் பின்னும் நற்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ அணியனோ என்றுரைத்தலும் தேர் வலானும்
வேயுயர் கானிற் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினான் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்''

இந்திரன் முதலான தேவர்கள் எல்லோருமே திரண்டுவந்து திருமாலின் தந்தையான தசரதரை வரவேற்கிறார்கள்; முழுநிலாவைப் போல சுடர்விடும் விமானத்தில் தசரதரை ஏற்றி விமானத்தையும் தாங்கள் தலையால் தாங்கிக்கொண்டு செல்கிறார்கள். பிரம்மாவின் சத்திய லோகத்திற்கும் மேலாக இருக்கும் மோட்ச உலகத்திற்குத் தசரதரைக் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள்.

''இந்திரன் முதல்வரான கடவுளர் யாரும் ஈண்டிச்
சந்திரன் அனையது ஆங்கோர் மானத்தில் தலையிற் தாங்கி
வந்தனன் எந்தை தந்தையென மனம்களித்து வாழ்த்தி
உந்தியான் உலகின் உம்பர் மீள்கிலா உலகத் துய்த்தார்''.

—(தொடரும்).

# தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து

—பேராசிரியர் புலவர் ஏறு
ஆர்க்காடு ஆ. ஜெ. இராமசாமி

1) மதிமுக குணவதி பிரமோ தூதா!
மலர்த்திருவெனத்திகழ் மாண்மாதே!
வதிபுவி உயர்களை வாட்டிடும் வறுமையும்
சிறுமையும் மடிந்திட வந்தினிதே
மதித்து நீ விதிமுறை யறிந்திவண் மாமழை
மாநில மெங்கணும் பொழிந்திட செய்
மதி நலம் மிக்கோர் மாண்புறும் அறிஞரும்
மாதரும் வாழ்ந்திடப் போந்தருளே.

2) சித்திரை முதலா சிறப்புறு பன்னிரு
திங்கள் மங்கையர் தெள்ளியோரும்
பத்தியாய்ப் பன்மலர் தூபநல் தீபமும்
பாங்காயேந்திப் துதிப்பவர்தம்
சித்தம் மகிழ்வுற செய்தொழில் அனைத்துமே
செழித்திவண் ஓங்கிடச் செய்திடுவாய்
எத்திறத்தினரும் இறையருள் வழுத்தியே
இணைந்தினி துறைந்திட விழைந்தருளே.


3) வள்ளுவர் வான்குறள் வண்டமிழ் மறைகளை
வைகலும் ஓதினால் வையகத்தில்
கள்ளமும் கபடமும் கரத்தலும் மறைந்திடும்
கள்ளமில் வள்ளியோர் கனிந்தீவார்.
தள்ளா விளையுளும் தாழ்விலா தியாவரும்
தழைத்தினி தோங்கித் திகழ்ந்திடுவார்
கொள்ளைக் கூட்டமும் கள்ளர் களீட்டமும்
குவலய வாட்டமும் பட்டேபோம்.


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறை அரங்கை அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படங்கள். சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி ஐ.ஏ.எஸ். மற்றும் அறநிலையத்துறையின் உதவி ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம் பி.ஏ.பி.எல்., ஆகியோர் உடன் உள்ளனர்.








சென்னை இராதாகிருஷ்ணன் நகரிலுள்ள அருள்முருகன் கோட்டம் திருக்குட நீராட்டு விழாவில் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் கலந்து கொண்டார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர் திருமதி சற்குணம் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றனர்.